KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 25 September 2026 இதழ்:- 27

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில் 15 பேர் குற்றவாளிகள்! 9 பேர் விடுதலை! குற்றவாளிகளுக்கு 220 வருட கடூழிய சிறைத்தண்டனை!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 24 பேரில் 15 பேர் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் 9 பேர் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறு வழக்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு விபரம் வெளியீடு! குற்றவாளிகளாக (4ம் பக்கம் பார்க்க)

# 22வது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவித்த சபாநாயகர்!

அரசியலமைப்புக்கான 22-வது திருத்தச் சட்டமூலம் மற்றும் நீதித்துறை திருத்தச் சட்டமூலம் ஆகியவை இலங்கையின் அரசியலமைப்புக் இணங்கவே உள்ளன என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன 22 செப் 2026 செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் விளக்கத்தை அறிவித்த சபாநாயகர், அரசியலமைப்பின் 83வது பிரிவின் விதிகளின்ப 22வது திருத்தச் சட்டமூலம் விதிகளுக்கோ அல்லது அதன் எந்தவொரு பகுதிக்கோ மக்கள் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் பெறத் தேவையில்லை என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (3ம் பக்கம் பார்க்க)

# முகமது நபி குறித்த பதிவு:- சவுதியில் அனோஜனுக்கு சிறைத் தண்டனை மரண தண்டனையாக மாறியது ஏன்?



முகமது நபி தொடர்பில் பேஸ்புக் ஊடாக தவறான கருத்தை பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சௌதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சிவராசா அனோஜனை விடுதலை செய்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

சிவராசா அனோஜனின் விடுதலைக்கான இராஜதந்திர ரீதியிலான சகல முன்னெடுப்புக்களையும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனின் குடும்பத்தினர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்த ஒரு சில மணி நேரத்தின் பின்னர் உயர்மட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி நடாத்திய (14ம் பக்கம் பார்க்க)


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy
Service Center Manager
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H&ME
YOUR NEXT MOVE STARTS HERE
SIVA NAGAMANY
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ் தங்கமாளிகை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
North Toronto CREMATORIUM
Royal Fashions
BRIDAL JEWELLERY RENTAL
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Smalll Business
Call us 416-285-6900
Spring
For All Moments of Life
416-893-2624 647 218 6222
TSA MEAT STORE
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4646
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
ONLINE: 416-623-8110
YUGAM RADIO
Ravi: 416-898-7284
Ruby: 416-670-6522
JRB universal inc
R.R.Rajkumar
647-289-6164
ஈழநாடு

# EELANADU

203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# 22வது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவித்த சபாநாயகர்!



அரசியலமைப்புக்கான 22–வது திருத்தச் சட்டமூலம் மற்றும் நீதித்துறை திருத் தச் சட்டமூலம் ஆகியவை இலங்கை யின் அரசியலமைப்புக்கு இணங்கவே உள்ளன என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இலங்கை நாடாளு மன்ற சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன 22 செப் 2026 செவ்வாய்க்கிழமை அறிவித் தார்.

உயர் நீதிமன்றத்தின் விளக்கத்தை அறிவித்த சபாநாயகர், அரசியலமைப்பின் 83வது பிரிவின் விதிகளின்படி, 22வது திருத்தச் சட்டமூலம் விதிகளுக்கோ அல்லது அதன் எந்தவொரு பகுதிக்கோ மக்கள் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் பெறத் தேவையில்லை என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக மேலும் தெரிவித் தார்.

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பது தொடர்பான அரசியலமைப்பு க்கான 22வது திருத்தச் சட்டமூலம், நீதித்துறை அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவால் ஆகஸ்ட் 18 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு தரப்பி னர் உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்து அந்த சட்டமூலத்தின் அரசியலமைப்புச் செல்லுபடித் தன் மையை எதிர்த்தனர். அதன்படி தாக்கல் செய்யப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை 67 ஆகும்.

பிரதம நீதிபதி பிரீத்தி பத்மன் சுரசேன மற்றும் நீதிபதிகள் அச்சலா வெங்காப் புலி, அர்ஜுனா ஒபயசேகர, சம்பத் அபய கூன், கிஹான் குலதுங்க ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் ஐந்து பேர் கொண்ட அமர்வின் முன் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

செப்டம்பர் 2 அன்று விசாரணைகளை நிறைவு செய்த பின்னர் குறித்த சட்ட மூலத்தின் அரசியலமைப்புக்கு உட் பட்ட தன்மை தொடர்பான விளக்கம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று உயர் நீதிமன்ற அமர்வு அறிவித் தது. இதற்கிடையில் 22வது அரசிய லமைப்புத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை செப்டம்பர் 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் குழு அண்மையில் தீர்மானித்தது.

இது இவ்வாறிருக்க 22 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கான நாடாளு மன்ற வாக்கெடுப்பு இன்று 25 செப் 2026 வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தைத் தொடர்ந்து, 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் இரண்டு நாள் விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அமைச் சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக 22செப் 2026 செவ்வாய்க்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர், இரு நாள் விவாதத்தைத் தொடர்ந்து, இம்மாதம் 25 ஆம் திகதி இது குறித்த வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் தார்.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான அனைத்து நடைமுறைகளையும் அரசா ங்கம் பின்பற்றியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அதற்கேற்ப உச்ச நீதிமன் றம் தனது முடிவை நாடாளுமன்றத் திற்குத் தெரிவித்துள்ளதாகவும் குறிப் பிட்டார்.

இருப்பினும், இந்த முடிவுக்கு எதிராகப் போராட எந்தவொரு கட்சிக்கும் உரிமை இருந்தாலும் அத்தகைய போராட்டங்கள் அல்லது கிளர்ச்சிகளின் அடிப்படையில் பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று அமைச்சர் கூறினார்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில் 15 பேர் குற்றவாளிகள்!
# 9 பேர் விடுதலை! குற்றவாளிகளுக்கு 220 வருட கடூழிய சிறைத்தண்டனை!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 24 பேரில் 15 பேர் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் 9 பேர் குற்றச் சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு வழக்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு விபரம் வெளியீடு! குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டவர்கள் (15 பேர்)

1. முகம்மது இப்ராஹிம் முகம்மது நௌபர் (நௌஃபர் மௌலவி) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

2. முகம்மது சரிபு ஆதம் லெப்பை (அபு ஹாத்விக்) அனைத்துக் குற்றச் சாட்டுகளுக்கும் குற்றவாளி

3.ஹயாத்து முகம்மது அஹமட் மில்ஹான் (அபு சில்லா) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

4. முகம்மது இப்ராஹிம் சாதிக் அப்துல்லா (அபு உமர்) அனைத்துக் குற்றச் சாட்டுகளுக்கும் குற்றவாளி

5. முகம்மது இப்ராஹிம் அப்துல் ஹக் (அபு பலா) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

6.முகம்மது அன்வர் முகம்மது ரிஸ்கான் (அபு தாரிக்) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

7. முகம்மது மன்சூர் முகம்மது சனாஸ்தீன் (அபு மிசான்) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

8.அப்துல் மனாப் முகம்மது பிரிதௌஸ் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

9. முகம்மது ரமீஷ் முகம்மது சாரிக் ஃ சாஜித் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

10.ஹஸைனுல் ரிஸ்வி முகம்மது காஹிர் சமீர் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி



11. முகம்மது ஹனீபா சைனுல் ஆப்தீன் (அபு ஹினா) அனைத்துக் குற்றச் சாட்டுகளுக்கும் குற்றவாளி

12. முகம்மது முஸ்தபா முகம்மது ஹாரிஸ் (அபு நன்ஜியார்) அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

13. ராசிக் ராஸா ஹுஸைன் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

14. கச்சி முகம்மது ஜஸ்மின் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

15. அப்துல் லதீப் முகம்மது சாப்பி (சாப்பி மௌலவி ஃ அபு புர்கான்) ஒரு குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பு. ஏனைய அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி

குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டவர்கள் (9 பேர்):

1. முகம்மது சஹீர் முகம்மது ஹசன் (அபுதாவுத்)

2. முகம்மது இப்திகார் முகம்மது இன்சாப் (அபு முகம்மது)

3. ரஷீத் முகம்மது இப்ராஹிம்

4. சைனுல் ஆப்தீன் முகம்மது ஜசீம்

5. முகம்மது முஸ்தபா முகம்மது ரிஸ்வான்

6. மீரா சாஹிப் முகம்மது நப்கி (அபு சனா)

7. முகம்மது அமீர் முகம்மது அயாத்துல்லா

8. முகம்மது அன்சார்தீன் முகம்மது இல்மி

9. முகம்மது அக்ரம் அஹக்கம்

சிறைக்காவலில் உயிரிழந்தவர் (1 நபர்):

யாசின் பாவா அப்துல் ரவுப் — வழக்கு விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் சிறைக்காவலில் உயிரிழந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கின் 15 குற்றவாளிகளுக்கு மொத்தமாக 220 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், குறித்த 15 குற்றவாளிகளுக்கும் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தும் இன்று முதல் அரசுடமையாக்கப்படுவதாக நிரந்தர மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



2019ஆம் ஆண்டு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் சம்பவத்தில் 23,270 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட 15 பேருக்கும் 220 வருடக் கடூழிய சிறைத் தண்டனை விதித்து மூவர் அடங்கிய மேல் நீதிமன்றம் 22செப் 2026 இரவு தீர்ப்பளித்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் 15 பேர் குற்றவாளிகளாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் 9 பேர் விடுவிக்கப்பட்டனர்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
Barrister, Solicitor & Notary Public



Rajabalini Sasitharan
Barrister, Solicitor & Notary Public

Real Estate
• Residential & Commercial: Purchases, Sales
• Mortgages & Refinances

Family Law
• Divorce
• Custody & Support

Estate Law
• Power of Attorney
• Wills & Estate Administration

Immigration Law
• Skilled Migration
• Provincial Nominee Program
• Super Visa and Sponsorship

Business Law
• Incorporations
• Purchases
• Sales & Leases

Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# நாமலுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



பாராளுமன்ற உறுப்பினரும், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார் பஸ் விமானங்களை கொள்வனவு செய்த போது இடம்பெற்ற சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கைது செய்யப் பட்ட நாமல் ராஜபக்ஷ 23 செப் 2026 புதன்கிழமை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இதன்போது நடத்தப் பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே நாமலுக்கு விளக்கமறியல் உத்தரவினை நீதிமன்றம் அறிவித்தது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னாள் தனிப்பட்ட செயலாளரான சுகீஷ்வர பண்டாரவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# புதிய மேல்நீதிமன்ற நீதிபதிகளாக 2 தமிழர்கள் 1 சிங்களவர் நியமனம்



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வினால் புதிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக பணி யாற்றும் நீதிச்சேவையின் விசேட தர அதிகாரியான பெருமாள் சிவகுமார், நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிரே ஷ்ட உதவிச் செயலாளர் மற்றும் நீதிச் சேவையின் விசேடதர அதிகாரி ஆனந்தி கனகரத்தினம் மற்றும் கொழும்பு மாவ ட்ட நீதிபதி மற்றும் நீதிச் சேவையின் விசேடதர அதிகாரி ஞானேச லலித் கண்ணங்கர ஆகியோர் புதிய மேல்நீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள் ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்கள் ஜனாதி பதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் 23 செப் 2026 புதன்கிழமை முற்பகல் உத்தி யோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

# யோகாவுக்கு நன்றி சொல்லுவோம்! விழாவை வெற்றியடையச் செய்வோம்!



ரொறன்ரோவில் யோகா என்ற பெயர் தெரியாதவர் யாரும் இல்லை என்ற அளவுக்கு, தமிழ் சமூகத்தின் பல்வேறு நிகழ்வுகளோடும் நீண்டகாலமாக பயணித்து வருபவர் திரு. யோகா அவர்கள். விழா என்றால் மேடை அலங்காரமும் இசையும் மட்டும் அல்ல. அந்த விழா தடையின்றி, பாதுகாப்பாக ஒழுங்காக நடைபெறுவதற்குப் பின்னால் கண்ணுக்குத் தெரி யாமல் உழைக்கும் பல கரங்களும் உள்ளன. அந்த வகையில், எந்தவித பிரதி பலனையும் எதிர்பாராமல், தமிழ் சமூகத்தின் நிகழ்வுகளில் பாதுகாப்புப் பணியில் ஈடு பட்டு, நிகழ்ச்சிகள் சுமுகமாக நடைபெறுவதற்கு தனது நீண்டகாலமாக பங்களிப்பை வழங்கி வருபவர் யோகா.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையில் நேர்மையை முதன்மையாகக் கருதுபவர். தனது பணி நேரத்தில் தவறான செயல்களுக்கு இடமளிக்காமல், விதிமுறை களையும் ஒழுங்கையும் கடைப்பிடிப்பதால் சிலருக்கு அவர் மீது அதிருப்தி இருக்கலாம். ஆனால் நேர்மையாகக் கடமையைச் செய்வது எல்லோரையும் திருப்தி ப்படுத்துவதற்காக அல்ல, சமூகத்தின் நலனுக்காக!

யோகா அவர்கள் அதனால் ஒரு போதும் தன் பாதையை மாற்றிக்கொண்டதில்லை. விமர்சனங்களைக் கடந்து, தனது கடமையைத் தொடர்ந்து செய்து வந்திருக் கிறார். இப்போது, அதே யோகா அவர்கள் எதிர்வரும் 03 ஒக்டோபர் 2026 அன்று ஒரு இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார். இந்நிகழ்ச்சி இளைய தலைமுறை யினரை மட்டுமல்லாது, முதிய தலைமுறையினரையும் இணைக்கும் ஒரு இசைப் பாலமாக அமையவிருக்கிறது. எனவே, இது வெறும் ஓர் இசை நிகழ்ச்சியாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. தமிழ் சமூகத்திற்காக இத்தனை காலம் அவர் செய்த பங்களிப்புக்கு நாம் சொல்லும் ஒரு சிறிய நன்றியாகவும் இதைப் பார்க்க வேண்டும்.

யோகாவை ஆதரிப்பது அவரை ஆதரிப்பது மட்டுமல்ல, நேர்மையான சமூகப் பணிக்கு மதிப்பளிப்பதாகும். தன்னலமற்ற சேவைக்கு மரியாதை செலுத்துவதாகும். நம் சமூகத்திற்காக உழைத்த ஒருவரின் முயற்சிக்கு தோள் கொடுப்பதாகும். ஆகவே கருத்து வேறுபாடுகளையும் தனிப்பட்ட விருப்புவெறுப்புகளையும் ஒரு புறம் வைத்து விட்டு, 03 ஒக்டோபர் 2026 அன்று நடைபெறும் இந்த இசை விழாவில் தமிழ் சமூகமாகத் திரண்டு கலந்து கொண்டு, யோகா அவர்களுக்கு நமது நன்றியையும் ஆதரவையும் வெளிப்படுத்துவோம். நிகழ்ச்சி வெற்றியடைவது யோகாவின் வெற்றி மட்டுமல்ல. அது நன்றி மறக்காத தமிழ் சமூகத்தின் வெற்றியாக அமையட்டும். வாருங்கள்! இசைக்காகவும் யோகாவுக்காகவும் ஒன்று கூடுவோம்! யோகாவின் சேவைக்கு நன்றி சொல்வோம்! 03 ஒக்டோபர் 2026 அனைவரும் திரண்டு செல்வோம்! - T.K. பரமேஸ்வரன் - ஈழநாடு

# கனடாவில் விமானப் பயிற்சியின் போது 2 தமிழ்மாணவர்கள் பலி



கனடாவில் விமான பயிற்சியில் ஈடுபட்டி ருந்த போது ஏற்பட்ட விபத்தில் தமிழ் நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கனடாவில் கடந்த 18 ஆம் திகதி அதி காலை ரெஜினாவில் இருந்து கார்லைல் வழியாக ஸ்டெய்ன்பாக், மனிடோபா வரை இரவு நேர பயிற்சியை மேற் கொண்ட போது சஸ்காட்சுவான் அருகே விமானம் விபத்துக்குள்ளாகி யுள்ளது.

இந்த விமான விபத்தில் பயணம் செய்த இருவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழ ந்துள்ள மாணவர்கள் இந்தியா தமிழக த்தைச் சேர்ந்த மனோஜ் சிவகுமார் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த ஸ்ரீசரன் திருஞானசம்பந்தம் என்பது உறுதி செய்யப்பட்டது.

இது தொடர்பாக கனடாவுக்கான இந்தியத் தூதரகம் வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில், இந்தக் கடினமான சூழலில் உயிரிழந்த மாண வர்களின் குடும்பத் திற்கு துணை நிற்கிறோம் மேலும் இருவரின் உடல்களும் இந்தியா கொண்டு செல்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப் படும் என தெரிவித்துள்ளது.

## அனோஜனின் குடும்பத்தினரைச் சந்தித்த அநுர

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கையரான சிவராசா அனோஜனின் பெற்றோரை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 22 செப் 2026 செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பானது ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சிவராசா அனோஜனுக்கு பொதுமன்னிப்பு பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் இயன்றளவு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி இதன்போது உறுதி யளித்துள்ளார். அதற்காக சட்ட ரீதியாகவும் இராஜதந்திர மட்டத்திலும் இலங்கை அரசாங்கம் தலையீடு செய்யும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, சவுதி மன்னரிடம் இது தொடர்பில் பொதுமன்னிப்பு வழங்குமாறு இராஜதந்திர மட்டத்தில் எழுத்துமூல கோரிக்கையை விடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் உள்ளிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமை ச்சு ஊடாக இதுவரை உத்தியோகபூர்வமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இங்கு அவரின் பெற்றோருக்குத் தெரிவித்ததுடன், குறித்த நடவடிக்கை கள் தொடர்ச்சியாகவும், உன்னிப்பாகவும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# ஊழல் எதிர்ப்பு திருத்தச் சட்டத்திற்கு 3இல் 2 பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்பு அவசியம்! உயர்நீதிமன்றத் தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்!



ஊழல் எதிர்ப்பு (திருத்தச்) சட்டமூலத்தில் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்பு பிரிவுகளுடன் முரண்படுகிறது. ஆகவே அவற்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். அதேபோல் சட்ட மூலத்தின் 17ஆம் ஏற்பாடு அரசியலமைப்புக்கு முரணாக காணப்படுவதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன பாராளுமன்ற சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 22 செப் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நீதிமன்ற வியாக்கியானத்தை அறிவித்தார். அவர் மேலும் அறிவித்ததாவது,

ஊழல் எதிர்ப்பு (திருத்தச்) சட்டமூலத்தின் சட்டமூலத்தின் 3,4,6(4) மற்றும் 6(5) ஆகிய வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல. எனவே இதனை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.

சட்டமூலத்தின் 6(7) வாசகம், அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12(1) மற்றும் 14(1)(அ) உடன் முரண்படுகிறது மற்றும் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு இணங்க விசேட பெரும்பான்மை ஒன்றின் மூலம் மாத்திரமே அங்கீகரிக்கப்பட முடியும்.

சட்டமூலத்தின் 7ஆவது வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) உடன் முரண்படுகிறது. எனவே, உறுப்புரை 81(உ)ஐ நீக்குவதற்கான முன்மொழிவு திரும்பப் பெறப்பட வேண்டும். 7ஆவது வாசகம் அதன் தற்போதைய வடிவிலேயே தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக இருந்தால் அரசியலமைப்பின் 82(5)ஆம் உறுப்புரையுடன் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) அல்லது உறுப்புரை 14அ(1)க்கு முரண்படாத வகையில், உறுப்புரை 88(1)(ஊ) பிரிவை முன்மொழியும் சட்டமூலத்தின் வாசகம் 11(1) உள்ளது. ஆகவே அதனை பாராளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம். பாராளுமன்ற குழு நிலையில் திருத்தப்படுவதற்கு முன் மொழியப்பட்டுள்ளவாறான சட்ட மூலத்தின் 11(2) ஆம் வாசகம், அரசியலமைப்பின் 10,12(1), 14(1)(அ) அல்லது 14அ ஆகிய உறுப்புரைகளுக்கு முரண்படவில்லை. ஆகவே அவற்றை பாராளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம்.

இச் சட்டமூலத்தின் 17ஆம் வாசகம், அரசியலமைப்பின் 3ஆம் உறுப்புரையுடன் சேர்த்துப் படிக்கப்படும் 4(இ) ஆம் உறுப்புரைக்கு முரண்படுகிறது. அரசியலமைப்பின் 13(2)ஆம் உறுப்புரையும் இந்த தீர்மானத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது. எனவே 17ஆம் வாசகத்தை அதன் தற்போதைய வடிவில் சட்டமாகுவதற்கு, அரசியலமைப்பின் 84(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதுடன், அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் வாக்கெடுப்பினால் மக்களால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும் என்றார்.

இதேவேளை அரசாங்கத்திற்கு 2:3 பெரும்பான்மை இருந்தாலும், மக்கள் சக்தியால் 22 ஆவது திருத்தத்தைத் தோற்கடிக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

குருநாகல், ஹிரியால தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டம் இப்பாகமுவ பாங்கொல்லையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரை ஆற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டில் பல்வேறு பிரச்சினைகளும் சவால்களும் நிலவும் சூழ்நிலையில், அரசாங்கம் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முயன்று வருகின்றது. இந்த 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கனம் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை, ஜனநாயகம், நீதி வழங்கும் பொறிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவை சீர் குலைக்கப்படும் என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மஹிந்தாவின் பொதுக்கூட்டத்தில் அர்ச்சுனாவின் பேச்சைக் கேட்டீர்களா?



கேள்வி:- மஹிந்தவின் பொதுக்கூட்டத்தில் அர்ச்சுனாவின் பேச்சினைக் கேட்டீர்களா?

பதில்:- எப்போதும், ஏமாற்றுகிறவர்கள் மேல் எனக்கு கோபம் வருவதில்லை. ஏமாறுகிறவர்கள் மேற் தான் எனக்குக் கோபம் வரும். அர்ச்சுனா முன்பு இருந்தபடித ான் இப்போதும் இருக்கிறார். நம் மக்கள் தான் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

திடீரென வந்த அர்ச்சுனாவை, எந்தவித ஆராய்வும் இல்லாமல் எப்படியெல்லாமோ நம்மவர்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டாடினார்கள். இன்று அர்ச்சுனாவின் செயலுக்கும், தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றாற் போல, அவர்களே அவரைத் தூற்றியும் திரிகிறார்கள். அதனைக் கண்டு நான் ஆச்சரியம் உறுகிறேன்.

ஓரளவாவது நம் இனத்துக்காகப் பாடுபட்டுக்கொண்டு இருப்பவர்களையெல்லாம், வஞ்சகர்கள் என்றும் பொய்யர்கள் என்றும் பட்டம் சூட்டி, தமது கொமன்ஸ் மூலம் சிலுவையில் அறைந்து வரும் இத்தகையவர்கள், அர்ச்சுனா காட்டும் ஆட்டத்திற்கு எதிராட்டம் ஆடத்தெரியாமல் மௌனித்திருப்பதைக் காணச் சிரிப்புத் தான் வருகிறது.

அர்ச்சுனாவின் அழகில் மயங்கி, அவரைக் ஹீரோவாக்கி புகழ்மாலையும், பொருள் மாலையும் சூட்டிய நமது புலம்பெயர் அன்ரிமார்களை முதலில் கழுவேற்ற வேண்டும். எங்கோ இருந்தபடி இங்குள்ளவர்களுக்குச் சூனியம் வைத்த அந்தச் சூர்ப்பணகைகள் இப்போதாவது அர்ச்சுனா மீதான மயக்கத்தில் இருந்து வெளிவந்திருப்பார்களா என்று தெரியவில்லை.

அர்ச்சுனாவை நம்பி, அவருக்காக மற்றவர்களைத் திட்டி வந்த தமிழ்அடியான் போன்றவர்களெல்லாம் இப்போது அர்ச்சுனாவின் செயல்களால் பாதிக்கப்பட்டு, தமது கற்பினை தமிழ்மக்களுக்கு முன் நிரூபிப்பதற்காக, வார்த்தைத் தீமூட்டி தீக்குளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அர்ச்சுனா புத்திசாலி தான் என்பதில் எனக்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. அவருக்கு இருக்கும் அரசியல் புத்திசாலித்தனத்தின் நூறில் ஒரு பங்கு கூட, நமது மக்குத் தமிழ்த் தலைவர்களுக்கு இல்லை என்பது உறுதியிலும் உறுதி.

அர்ச்சுனா, இனியும் தமிழ்மக்களை ஏமாற்றித் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு, மொட்டுக்கட்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம், அவர்களின் அன்பைப் பெற்று, வரும் தேர்தலில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தேசியப்பட்டியல் இருக்கைகளில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளத் தெளிவாக அத்திவாரமிடத் தொடங்கி விட்டார்.

யார் கண்டது? அக்கட்சி எதிர்காலத்தில் அரசமைக்கும் பட்சத்தில், எம்.பி அர்ச்சுனா அமைச்சர் அர்ச்சுனாவாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



பாட்டியை ஏமாற்றிக் களவெடுத்த வடையை இன்ன மரக்கொப்பில் இருந்து தான் தின்ன வேண்டுமென, காகம் நினைக்கப் போகிறதா என்ன? எந்தக் கொப்பில் இருந்தேனும் வடையைத் தின்னக் கிடைத்தால் போதும் என்று தானே அது நினைக்கும். அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

கேள்விக்கு கம்பவாருதியின் பதில்

# சவேந்திர சில்வாவின் வாதமும் சர்வதேச நீதிக்கான தேடலும்



இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியும் பாதுகாப்பு தலைமை அதிகாரியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, நான் போர்க்குற்றவாளி அல்ல. எனது நாட்டிற்காகவே போரிட்டேன்'' எனக் கூறி, தன் மீது மேற்குலக நாடுகளால் விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், போரின் இறுதிப்பகுதியில் பொதுமக்கள் உயிரிழப்புகளைக் குறைக்க இராணுவம் அதிக பட்சமாக முயன்றதாகவும் சர்வதேச நாடுகள் சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு நேரடி உரையாடல் மூலம் பதிலளிக்கத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

58வது படைப்பிரிவை தலைமை தாங்கிய அவர், 1,23,000க்கும் மேற்பட்ட பொதுமக்களை மீட்டதாகவும், சரணடைந்த விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களை முறையான புனர்வாழ்வுக்கு உட்படுத்தியதாகவும் சவேந்திர சில்வா குறிப்பிடுகிறார்.

சிவிலியன் உடைகளில் போரிட்ட போராளிகளால் ஏற்பட்ட குழப்பங்களே பொதுமக்கள் இழப்புகளாகச் சித்தரிக்கப்படுவதாக அவர் வாதிடுகிறார். மேலும், இராணுவச் சட்டங்களை மீறியிருந்தால் உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தன் மீது விதித்துள்ள பயணத் தடைகள் நியாயமற்றவை என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் வேறானவை. போரின் இறுதி நாட்களில் பொதுமக்கள் வசித்த பகுதிகள், மருத்துவமனைகள் மற்றும் பாதுகாப்பு வளையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது

ஒரு நாட்டின் இாணுவத் தலைவராகக் கடமையாற்றியவர் என்ற முறையில், 'கட்டளைப் பொறுப்பு' கொள்கையின் கீழ் மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பு அவருக்கு உண்டு என்பதை சர்வதேச அமைப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலம் நம்பகமான விசாரணை நடைபெறவில்லை என்ற கருத்தே சர்வதேசத் தடைகளுக்கும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கும் பிரதான காரணமாக அமைகிறது.

போர் முடிந்து ஆண்டுகள் பல கடந்த பின்பும், உண்மையைக் கண்டறிவதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதிலும் நிலவும் இடைவெளி மாறவில்லை. வெறுமனே குற்றச்சாட்டுகளை மறுப்பதோ அல்லது சர்வதேசத் தடைகளை விமர்சிப்பதோ நிரந்தரத் தீர்வைத் தராது. வெளிப்படையான, சுதந்திரமான மற்றும் நடுநிலையான விசாரணைகளின் மூலம் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதே இலங்கைச் சமூகங்களிடையே உண்மையான நல்லிணக்கத்தையும் சர்வதேச அரங்கில் நாட்டின் நம்பகத்தன்மையையும் கட்டியெழுப்ப ஒரே வழியாகும்.

# விடுதலைப்புலிகள் அமைப்பை உடைத்தது நான் தான்!

## 17 ஆண்டுகளுக்குப் பின் தன் வாயால் உண்மையை ஒப்புக் கொண்டார் ரணில்!

ஜே.ஆர். ஜெயவர்த்தன உட்பட்ட அன்றைய அரசாங்கத்தை இலங்கை - இந்திய ஒப்பந்தம் முற்றாக முடக்கிப் போட்டது. நான் அந்த நிலையை மாற்றி, முடக்கத்தை உடைத்தெறிந்தேன். உண்மையைச் சொன்னால், ஜே.ஆர். இந்திய ஒப்பந்தத்திற்குள் முடக்கப்பட்டிருந்தார் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் அமைப்பை அரசியல் ரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் உடைத்தது நான் தான். விடுதலை புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மானை பிரித்து, ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டு வந்தேன் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டத்தில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆற்றிய உரை தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன இதன் போது ரணிலின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அதாவது குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தான் ஒரு 'விடுதலைப் புலி' என பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் முந்தைய அரசியல் வரலாற்றுப் பின்னணியை சுட்டிக்காட்டி விளக்கமளித்தார்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னால் ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. முதன் முதலில் பயங்கரவாத அமைப்பில் இருந்த ஒருவரைத் தம் பக்கம் ஈர்த்தவர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆவார். அவர் தான் டக்ளஸ் தேவானந்தாவை முதன் முதலில் இணைத்துக் கொண்டார். அதற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தம் பக்கம் இணைத்தார். அதே வழியையே மஹிந்த ராஜபக்ஷவும் தொடர்ந்து பின்பற்றினார். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்ஜெயவர்த்தன உட்பட்ட அன்றைய (20ம் பக்கம் பார்க்க)



# வெளிநாட்டில் உள்ள பசில் ராஜபக்ஷவைக் கைது செய்ய இன்டர்போல் ஊடாக நீல அறிவித்தல் கோரிக்கை!



மாத்தறை பிரவுன்ஸ்ஹில் காணி கொள்வனவு மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதியில் சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் 7.8 மில்லியன் ரூபாய் நிதியை பயன்படுத்தி 12,000 டி-ஷேர்ட்டுகளை விநியோகித்தமை தொடர்பான விசாரணைகளில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் (INTERPOL) உதவியை கோரியுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் தங்கியுள்ள பசில் ராஜபக்ஸவை அடையாளம் கண்டு, அவர் தங்கியிருக்கும் இடம் மற்றும் தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இன்டர்போல் ஊடாக நீல அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை பிரவுன்ஸ்ஹில் பகுதியில் 1.5 ஏக்கர் காணி ஒன்றை 60 மில்லியன் ரூபாய்க்கு கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பசில் ராஜபக்ஸவுக்கு எதிராக மாத்தறை பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இடம் பெற்று வருகிறது.

அவர் நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகாத நிலையில், கடந்த ஜீலை மாதம் அவருக்கு எதிராக மீண்டும் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் மேலும் பலர் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பசில் ராஜபக்ஸ வெளிநாட்டில் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக அவரது சட்டத்தரணிகள் முன்னதாக நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்டர்போலின் நீல அறிவித்தல் என்பது ஒருவரை சர்வதேச ரீதியில் கைது செய்வதற்கான பிடியாணை அல்ல. மாறாக, குற்றவியல் விசாரணையொன்றுடன் தொடர்புடைய நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது நடவடிக்கைகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக பயன்படுத்தப்படும் சர்வதேச எச்சரிக்கை முறைமையாகும்.

இதற்குப் புறம்பாக, சிவப்பு அறிவித்தல் (Red Notice) என்பது ஒருவரை கண்டறிந்து, நாடு கடத்தல் நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் நிலையில் தற்காலிகமாக கைது செய்யுமாறு சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு கோரும் தன்மையுடையதாகும்.

பசில் ராஜபக்ஸவுக்கு எதிராக நீல அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை இலங்கைக்கு மீள அழைத்து வருவதற்கான அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனோஜனை மீட்க அதிக பட்ச நடவடிக்கை!

சவுதி அரேபியாவில் சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்கியுள்ள இலங்கை இளைஞரான சிவராசா அனோஜனை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் அதிகபட்ச தலையீட்டை செலுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாங்கள் இந்த விடயம் தொடர்பில் அதிகபட்ச தலையீட்டை மேற்கொண்டு வருகிறோம் எனக் குறிப்பிட்டார். வெளிவிவகார அமைச்சரும் வெளிவிவகார அமைச்சும் இதில் தலையிட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அதேபோன்று ஜனாதிபதி செயலகமும் இதில் தலையீடுகளை மேற்கொண்டு வருகிறது. நாங்கள் இதன் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறோம், இதில் எவ்வித தாமதமும் ஏற்படவில்லை.

எனினும் இவ்வாறான விடயங்களைக் கையாளும் போது குறிப்பிட்ட இராஜதந்திர நடைமுறைகளின் படியே செய்ய வேண்டும். ஏனெனில் அந்தந்த நாடுகளுக்கென சட்ட திட்டங்கள் காணப்படுகின்றன.

இருப்பினும் அவரை மீட்டெடுப்பதற்கு நாங்கள் அதிகபட்சமாக தலையிட்டு நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்துள்ளார். அனைத்துத் தரப்பினரும் பல்வேறு வழிகளில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com





# ரணிலின் காய் நகர்த்தலை சாதுரியமாக முறியடிக்க சஜித் முன்னெடுத்துள்ள ஐக்கிய முன்னணி பேரணி!

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

பல்வேறு அரசியல் செயற்பாடுகளைச் சந்திக்கும் போது இரட்டைக்குழல் துப்பாக்கி என்ற சொற்பதம் பாவிக்கப் படுவது வழக்கம். இவ்வாறான ஒரு நிலைமை இப்போது இலங்கையில் ஆட்சி புரியும் தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்டுள்ளது வெளிச்சமாகத் தெரிகிறது.

ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வேகமான சட்ட நடவடிக்கைகளும், 22ம் அரசியல் திட்டத்தை சகல தடைகளையும் தாண்டி நிறைவேற்ற முன்னெடுக்கப்படும் முயற்சிகளுமே அநுர அரசுக்கு இரட்டைக்குழல் துப்பாக்கியாகியுள்ளது.

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் காலங்களில் அநுரவின் தேசிய மக்கள் சக்தி ஊழல் ஒழிப்பையே தங்களின் பிரதான அம்சமாக மேடைகளிலும் ஊடகங்களிலும் கூறி வந்தது. இதனைக் கூறியே மக்களிடம் வாக்கு கேட்கப்பட்டது. 78 ஆண்டுகளாக ஏமாற்று அரசியல் நடத்தி வந்த பிரதான கட்சிகளில் வெறுப்படைந்திருந்த மக்கள் தங்கள் வாக்குப்பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கி அதனை கதிரையேற்றினர்.

ஆட்சிக்கு வந்த இரண்டாவது வருடத்தில் ஊழல் ஒழிப்பு என்றால் என்னவென்று அர்த்தப்படும் செயற்பாடுகளில் ஆட்சியாளர்கள் இறங்கினர். ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன மற்றும் இவர்களுடன் சேர்ந்து இயங்கிய சொரியல்கள் என்ற பாகுபாடின்றி ஊழல் புரிந்த அரசியல்வாதிகளும் அவர்களின் ஏஜன்டுகளும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் பலர் இந்த வலைக்குள் வரவிருப்பதாக சொல்லப்படுகிறது.

அடுத்த ஜனாதிபதி என்று பொதுஜன பெரமுனவினால் அழைக்கப்படும் நாமல் ராஜபக்சவினதும் அவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் தங்கள் இளவரசருக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் என அவரது ஆதரவாளர்கள் அரசுக்கு எதிராக குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

மற்றும் உறவினர்கள் என பலர் நீதிமன்ற படிகளில் ஏறி இறங்கி வருகின்றனர். ராஜபக்சக்களின் பின்கதவால் ஜனாதிபதியாகி அவர்களை காப்பாற்றி வந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது நாமல் மீது அக்கறை காட்டி அவருக்காக அறிக்கைகள் விடுவது இரகசியமான ஒன்றல்ல.

நாமலுக்காக ரணில் உரத்துக் குரல் கொடுப்பது சஜித் பிரேமதாசவை அதனூடாக அரசியலிலிருந்து ஓரங்கட்டும் மறைமுக செயற்பாடு என்று கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். இதனையே ஐக்கிய மக்கள் சக்தியின் புள்ளிகளும் சஜித்துக்கு தெரிவித்துள்ளனர். இதனைப் புரிந்து கொண்டுள்ள சஜித் கிளித்தட்டு அரசியலை ஆரம்பித்துள்ளது வெளிப்படையாகப் புலப்படுகிறது. எதிர்க்கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் பொதுக்கூட்டில் இணைத்துக் கொண்டு தனது பயணத்தை வேறு திசையில் ஆரம்பித்துள்ளார்.

இதன் முதல் முன்னெடுப்பாக பொது எதிரியை களத்தில் சந்திப்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட போவதாக ஓர் அறிக்கையை விடுத்துள்ளார். Sajith announces his SJB – UNP alliance to mount united front against ruling government என்று கடந்த 17ம் திகதி பல ஆங்கிலப் பத்திரிகைகள் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தன.

22ம் அரசியல் திருத்தத்தை எதிர்ப்பதற்காக பெருமளவிலான நடவடிக்கைக்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பொது ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கவும் தாம் முன்வந்துள்ளதாக சஜித் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஆனால் இது சம்பந்தமாக ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. இரண்டு கட்சிகளும் முழுமையாக இணையாமல் குறிப்பிட்ட ஒரு பொது நோக்கத்துக்காக — அநுர அரசின் 22ம் அரசியல் திருத்தத்தை எதிர்ப்பதற்கு மட்டுமே இந்த முன்னணியை அமைப்பது என்பது இதன் அர்த்தம் என்று அனைத்துக் கட்சிகளுக்கும் தெரியும்.

தற்காலிகமோ அல்லது நிரந்தரமோ இந்த இணைப்பு என்பதற்கு அப்பால் இதன் சாத்தியம் பற்றி நோக்குவதாயின் 1970களிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் இரு தரப்பினதும் முக்கிய விடயங்களை நினைவுக்குக் கொண்டு வர வேண்டும்.

1973ல் டட்லி சேனநாயக்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருந்த போது அவருடன் நேரடியாக மோதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தவர் அவ்வேளை அக்கட்சியின் எம்.பியாகவிருந்த சஜித்தின் தந்தை ரணசிங்க பிரேமதாச. 1965ல் உருவான தேசிய அரசாங்கத்தில் அதன் பிரதமராகவிருந்த டட்லி சேனநாயக்கவினால் முதன்முதலாக ஓர் உதவி அமைச்சராக நியமிக்கப்பட்டவர் பிரேமதாச. அந்த ஆட்சியில் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த எம்.திருச்செல்வம் அப்பதவியை துறந்ததையடுத்து உள்ளூராட்சி அமைச்சராக டட்லி சேனநாயக்கவினால் நியமிக்கப்பட்டவரும் பிரேமதாசவே.

டட்லியின் மரணத்துக்குப் பின்னர் அவரை தம் பக்கம் இணைத்துக் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகி 1977 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்து 1978ல் தம்மை ஜனாதிபதியாக்கியதும், பிரதமராக பிரேமதாசவை நியமித்து அவரை எதிரியாக்காது பார்த்துக் கொண்டார்.

1989ல் பிரேமதாச ஜனாதிபதியான போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகனான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பார் என்ற எதிர்பார்ப்பு சகல கட்சியினரிடமும் இருந்தது. ஆனால் அது நடக்கவில்லை. தமக்கு எப்போதும் றப்பர் ஸ்டாம்பாக இருக்கக் கூடியவரான தபால் அமைச்சராகவிருந்த டிங்கிரி பண்டா விஜேதுங்கவை பிரதமராக அவர் நியமித்தார். இலங்கை அரசியலில் சப்பாணி என பெயர் பெற்றவர் விஜேதுங்க. இவரே முதன்முதலாக தமது ஆட்சியில் ரணிலை பிரதமராக நியமித்தவர்.

பிரேமதாச — ரணில் இணக்கமின்மை பிரேமதாசவின் மரணத்துக்குப் பின்னரும் குடும்ப ரீதியாக விரிவடைந்து வந்துள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியை 1994ல் பெற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க கடந்த 34 வருடங்களாக கட்சியை ஒரு குடும்பமாக கணித்து தம்முடனேயே வைத்துக் கொண்டிருக்கிறார். துணைத்தலைவர் பதவியை சஜித் பல தடவை எதிர் பார்த்தாராயினும் ரணில் அதனை வழங்கவில்லை. மாறாக, தமது தாய்மாமன் மகனான றுவான் விஜேவர்த்தனவுக்கு அப்பதவி வழங்கி தமக்குப் பின் அவரே கட்சியின் தலைவர் என்னும் எழுதாத நியமனத்தை ரணில் வழங்கியுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச பிரிந்து சென்ற தம்முடன் வந்தவர்களையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியதற்கு இதுவும் ஒரு காரணம்.

இவ்விடத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பொதுவான ஒரு விடயம் உண்டு. ரணிலும் சஜித்தும் எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறவில்லை. ராஜபக்ச குடும்பம் இலங்கையில் ஆட்சியை கைப்பற்றத் தொடங்கிய பின்னர் இவர்களது கட்சிகள் எந்தவொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறவில்லை. விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியென பெயர் பெற்றிருந்தாலும் இப்போது அதல பாதாளத்தில் விழுந்துள்ளது.

பல தடவை சஜித் அணியை ஐக்கிய தேசிய கட்சியுடன் மீள.ணைக்க ரணில் முயற்சித்தாராயினும் அதன் தலைமைப் பதவியை அவர் தம்முடனேயே வைத்திருக்க விரும்பியதால் சஜித் தனது கட்சியினருடன் தனித்து இயங்கவே விரும்பினார். இப்போதுள்ள நிலைமையில் சஜித்திலும் பார்க்க நாடாளுமன்ற பலத்தில் ரணில் பின் தங்கியவராகவே உள்ளார். எனினும், கட்சித் தலைமை பதவியை எவருக்கும் விட்டுக் கொடுக்க ரணில் தயாரில்லை. இதுவே இரண்டு கட்சிகளும் தொடர்ந்து தனித்தனியாக இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதற்கான காரணம்.

ஆனால் இப்போது நீதிபதிகளின் வயதெல்லையை அதிகரிக்கும் 22வது அரசியல் திருத்தத்தை அனைத்து எதிர்க்கட்சிகளுமே எதிர்ப்பதால், அவைகளை இணைத்துக் கொண்டு அதற்குத் தலைமை தாங்கி இலங்கை அரசியலில் தமக்கான ஓர் இடத்தை நிலைநாட்ட இதுவே சரியான தருணமென நினைக்கும் சஜித் இரண்டு மாங்காய்களை ஒரே கல்லில் விழுத்த முயற்சிக்கிறார்.

நாமல் ராஜபக்சவின் கைது, பிணை வழங்காமை, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் வழக்கு ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது ஒரு புறம் தள்ளுவதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளதும் ஒத்துழைப்போடு எடுக்கப்படும் 22ம் திருத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்குவது தமது எதிர்கால அரசியலுக்கு பலமாக அமையுமென சஜித் நம்புகிறார். இதற்கென உருவாக்க அவர் முன்வந்துள்ள பொது ஐக்கிய முன்னணியில் ரணில் இணையத் தவறினால் அவரது எதிர்கால அரசியல் செயற்பாட்டுக்கு அவரே குழி வெட்டியவராக மாறவேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் சஜித் முழுமையாகக் கருதுகிறார். .தற்காகவே பொது ஐக்கிய கூட்டணியின் தலைமையை தாமே எடுத்து அதில் ரணில் உட்பட அனைவரையும் .ணைத்துக்கொண்டு பயணிக்க சஜித் முன்வந்துள்ளார்.

இந்த மாதம் 24ம் திகதி கொழும்பில் நடத்த முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ள ஆட்சிக்கு எதிரான எதிரணிகளின் பேரணி கடந்த வாரம் அநுராதபுரத்தில் இடம்பெற்ற மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவின் பேரணியை மேவிச் செல்லுமா? அல்லது சஜித்தின் தலைமைத்துவத்துக்கு இது சோதனையாக அமையுமா? ரணில் எடுக்கும் முடிவில் தான் அதுவா இதுவா என்பது தெரியவரும்.

நன்றி:- ஈழநாடு – யாழ்ப்பாணம்

(20 செப்டம்பர் 2026)

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


19 செப்டம்பர் 2026 முதல் 25 செப்டம்பர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லப்பா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வுபெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாக வும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக் கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாள் 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது 6வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 செப்டம்பர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 செப்டம்பர் 2026 சனிக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஸ்ரீகுமரன் சுவர்ணா இணையர்களின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 07 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 செப்டம்பர் 2026 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 செப்டம்பர் 2026 புதன்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முத்துத்தம்பி பசுபதிப்பிள்ளை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 12 செப்டம்பர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஆவணி சதுர்த்தி தினத்தன்று வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் இன்பநாயகம் ஜெயந்தன் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



# அனுராதபுரத்துப் பேரணி உணர்த்துவது என்ன?

நாமலின் தந்தை பிள்ளையானை கருணாவை மாற்றினார். நாமல் அர்ச்சுனாவை மாற்றினார் இப்படிக் கூறியிருப்பவர் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய இந்திக அனுருத்த.

மஹிந்த அணியானது அர்ச்சுனாவுக்குக் கொடுத்திருக்கும் நற்சான்றுப் பத்திரம் இது. அர்ஜுனா யார் என் பதையும், அவரை அவர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பதையும், அவரை அவர்கள் எந்த நோக்கக் கோணத்தில் இருந்து அணுகுகிறார்கள் என்பதனையும் அது தெளிவாகக் காட்டுகிறது. இதற்கு மேலும் அர்ஜுனாவைப் பற்றி இங்கே உரையாட வேண்டிய அவசியம் இல்லை.



ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால், அடுத்த மாகாண சபைத் தேர்தலில் எத்தனை குட்டி அர்ஜுனாக்கள் கிளம்பப் போகிறார்கள் என்பது தான். அவர்கள் தமிழ் வாக்குகளை எவ்வளவு தூரம் சிதறடிக்கப் போகிறார்கள் என்பது தான். ஏனென்றால் அர்ஜுனா மேலும் குட்டி போடக்கூடிய ஓர் அரசியல் சூழல் தான் தொடர்ந்து நிலவுகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அர்ஜுனா தெரிவு செய்யப்படக் காரணங்கள், தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமை, ஐக்கியமின்மை, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் ஜனவசியம் இழந்தமை போன்றவை தான். அதே காரணங்கள் இப்பொழுதும் உண்டு. அதை விட வேறு புதிய காரணங்கள் அரங்கில் தோன்றி விட்டன. ஒரு மாகாண சபை தேர்தல் நடக்குமாக இருந்தால், அதில் நிதிப்பலம் மிக்க புதிய வருகைகளுக்கான வாய்ப்புகள் தெரிகின்றன. அந்த அடிப்படையில் பார்த்தால் வரக்கூடிய அடுத்த தேர்தலில் வாக்குகள் மேலும் சிதறுமா?

இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியலில் இரண்டு பிரதான வாக்குத் தளங்கள் உண்டு. ஒன்று, தமிழ்அரசுக் கட்சிக் குரியது. மற்றது,தேசிய மக்கள் சக்திக் குரியது. தமிழ்த் தேசியப் பேரவை மாகாண சபையை நோக்கி இதுவரை யிலும் ஆர்வத்தை வெளிப்படுத்த வில்லை. வெளிப்படுத்தினாலும் இப்பொழுது அவர்களுடைய வாக்கு வங்கி ஒப்பீட்டு அளவில் சிறியது.

தமிழரசுக் கட்சிக்குரிய வாக்குத் தளந்தான் உள்ளவற்றில் பெரியது. மாகாண சபைத் தேர்தல் என்று ஒன்று நடந்தால் அதில் அதிகளவு வாக்குகளை கைப்பற்றும் சக்தி இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குத் தான் உண்டு. ஏனென்றால் அந்த கட்சி தான் வடக்கு – கிழக்கு தழுவிய வாக்குத் தளத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே சமயம் தனக்குள் தானே மோதிக் கொண்டிருக்கும் கட்சி அது. இரண்டு அணிகளாக நிற்கிறது. இதில் சிறீதரன், கஜேந்திர குமார் அணிக்குக் கிட்டவாகத் தெரிகிறார். ஆனால் தேர்தல் என்று வரும் போது அவர் எப்படிப்பட்ட முடிவை எடுப்பார்?

கடந்த 2024 ஜனாதிபதி தேர்தலின் போது அவர் பொது வேட்பாளர் அணியோடு நின்றார். மாவை சேனாதிராஜா அப்பொழுது உயிருடன் இருந்தார். அவரும் பொது வேட்பாளருக்குக் கிட்ட நிற்பது போல தோன்றினார். ஆனால் கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகள் 20,348. சஜித் பிரேமதாசவை ஆதரித்த சந்திரகுமார் –சுமந்திரன் அணிக்குக் கிடைத்த வாக்குகள் 30,571.

அதன்படி கூட்டிக்கழித்துப் பார்த்தால் சிறீதரன் கிளிநொச்சியில் செல்வாக் கிழந்து விட்டார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் தொடர்ந்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறீதரன் வழமை போல வெற்றி பெற்றார். தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த ஒரே ஒரு ஆசனம் அது. இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் 75வயதான ஒரு கட்சிக்கு அதன் இதயம் என்று கூறத்தக்க ஒரு மாவட்டத்தில் ஒரே ஒரு ஆசனந் தான் கிடைத்தது. அதுகூட கிளிநொச்சியை மையமாகக் கொண்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு.

இங்கே சிறீதரன் பெற்ற வெற்றியை அதற்கும் சில மாதங்களுக்கு முன் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் பெறத் தவறிய வெற்றியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மிகக் குறுகிய காலத்துக்குள் அங்கே மாற்றம் நிகழ்ந்ததா? அல்லது பொது வேட்பாளருக்காக சிறீதரன் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து உழைத்திருக்கவில்லையா?

சிறீதரன் சுமந்திரன் அணியின் நிலைப்பாடுகளுக்கு எதிராக கொள்கை ரீதியாக ஏனைய அணிகளோடு இணைந்து நின்றாலும், கட்சியை உடைக்கத் தயாரில்லை என்பதைத் தான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிரூபித்து வந்திருக்கிறார். அதேசமயம் சிறீதரனை முற்றாகத் தோற்கடித்து, கட்சியை விட்டு அகற்றி கட்சியை தனது கேள்விக்கு இடமற்ற கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர சுமந்திரனாலும் முடியவில்லை என்பது தான் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சியின் உட்கட்சி யதார்த்தம் ஆகும்.

இதில் இப்பொழுது அரசியலில் ஈடுபடக்கூடும் என்று ஊகிக்கப்படும் புலம் பெயர்ந்த தமிழரான ஊடக முதலாளி சிறீதரனுக்கு நெருக்கமாகக் காணப்பட்டவர். எனினும் சிறீதரன் அவரை உபயோகித்து கட்சியை உடைக்க முயற்சிக்கவில்லை. அல்லது மறுவளமாகச் சொன்னால் குறிப்பிட்ட ஊடக முதலாளியும் உட்பட தமிழ் தேசிய பேரவையாலும் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே வருமாறு அல்லது ஒரு புதிய அணியை உருவாக்குமாறு சிறீதரனைத் தூண்ட முடியவில்லை. சிறீதரன் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே வரத் தயாரில்லை என்பது கடந்த இரண்டு ஆண்டுகளிலும் காணப்பட்டு வரும் தமிழரசுக் கட்சி யதார்த்தம் ஆகும்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் தேர்தலில் சிறீதரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு சில தரப்புகள் விரும்பியதாகத் தெரிகிறது. ஆனால் சிறீதரன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்குத் தயாராக இல்லை என்று தெரிகிறது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சிறீதரன் துறப்பாராக இருந்தால் வரிசையில் அவருக்கு அடுத்த படியாக கூடுதலான வாக்குகளை பெற்ற சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக வருவார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக கட்சிக்குள் பலமடைவாராக இருந்தால் அடுத்ததாக என்ன செய்வார்?

கட்சிக்குள் தனது நிலையை பலப்படுத்திக் கொண்ட பின் சுமந்திரன் கட்சியை எப்படித் தன்னுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்றுதான் சிந்திப்பார். அவ்வாறு சிந்தித்தால் அவர் சிறீதரனை எப்படித் தோற்கடிப்பது என்று தான் சிந்திப்பார். சிறீதரன் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டாலும் அவரை சொந்தக் கட்சிக்காரர்களே மாகாண சபைக்குள் சுத்தி வளைக்கும் வாய்ப்புகள் அதிகம் இருக்கும். ஏற்கனவே விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலத்தில் அது நடந்தது. எனவே சிறீதரன் மாகாண சபை முதலமைச்சராக தெரிவு செய்யப்படுவாராக இருந்தால், தனது சொந்தக் கட்சிக்காரர்களாலே சுற்றி வளைக்கப்படும் ஆபத்துக்கள் அதிகம் இருக்கலாம்.

அதாவது சிறீதரன் முதலமைச்சராக வந்தாலும் சுற்றி வழிக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கும். அதேசமயம் அவர் முதலமைச்சராக வருவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும் பொழுது அது அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக சுமந்திரனைக் கட்சிக்குள் இப்போது இருப்பதை விடவும் பலப்படுத்திவிடும்.

சுமந்திரனைக் கட்சிக்குள் இப்போது இருப்பதை விடவும் பலமானவராக ஸ்தாபிப்பதற்கு சிறிதரன் விரும்ப மாட்டார். எனவே ஒரு முதலமைச்சராக வருவதை விடவும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து விட்டுப் போகலாம் என்று அவர் முடிவெடுக்கும் வாய்ப்புக்களே அதிகமாகத் தெரிகின்றன. தனக்கு நெருக்கமானவர்களுக்கு அவர் அவ்வாறு தெரிவித்ததாகவும் சில தகவல்கள் உண்டு.

எனவே சிறீதரன் முதலமைச்சர் வேட்பாளராக இறங்கக்கூடிய வாய்ப்புகள் இப்பொழுது பிரகாசமாக தெரியவில்லை. எதிர்காலத்தில் நிலைமைகள் மாறலாம்.அதேசமயம் வட மாகாண முதலமைச்சராக வரவேண்டும் என்று சுமந்திரன் விரும்புகிறாரா என்ற கேள்வியையும் இங்கே முன்வைக்க வேண்டும்.

தான் ஒரு கெட்டிக்கார நிர்வாகி அல்ல வென்றும் ஒரு சட்ட மன்றத்தை நிர்வகிப்பது தனக்கு சவால் மிகுந்தது என்ற பொருள்படவும் அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்கு தெரிவித்ததாக சில தகவல்கள் ஏற்கனவே உண்டு. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் அவர் இதுவரையிலும் தன்னை ஒரு கிங் மேக்கர் ஆகத்தான் நிரூபித்திருக்கிறார் கிங்காக அல்ல.

ஒரு கிங் மேக்கர் ஆக இருப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிதான் அதிகம் பொருத்தமானது சுதந்திரமானது. ஒரு முதலமைச்சருக்கு பொறுப்புக்கள் அதிகம். அது ஒரு சட்டமன்றம். எனவே சுமந்திரன் ஒரு முதலமைச்சராக வர ஆசைப்படுவாரா என்ற கேள்விக்கு விடை முக்கியம். அதில் அவர் எதிர்பார்க்கும் வாக்குகள் கிடைக்குமா?



இப்போதுள்ள கட்சி நிலவரங்களின்படி ஒரு மாகாண சபைத் தேர்தல் நடக்குமாக இருந்தால், அதில் தமிழரசுக் கட்சிக்குத் தான் அதிகம் வெற்றி வாய்ப்புகள் உண்டு. ஆனால் எதிர் காலத்தில் மேற்சொன்ன ஊடக முதலாளி தேர்தலில் இறங்குவாராக இருந்தால், அவர் தமிழ்த் தேசியப் பேரவையின் ஆதரவைப் பெறுவாராக இருந்தால், அந்த அணியோடு சிறீதரன் அணியும் இணையுமாக இருந்தால் என்ன நடக்கும்?

அதன் முதல் விளைவாக, தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்புகள் அதிகமாகப் பாதிக்கப்படும். இது வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். மாகாண சபை தொடர்பான தமிழ் உரையாடல்களில் அதிகமானவை வடக்கை மையமாகக் கொண்டவை. கிழக்கைக் கவனத்தில் எடுக்காதவை என்பதையும் இங்கே தொகுத்துக் காட்ட வேண்டும்.

எனவே தமிழ்த் தேசியப் பேரவையும் சிறீதரன் அணியும் புலம் பெயர்ந்த ஊடக முதலாளியும் ஒன்றிணைவார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசிய வாக்கு வங்கியை மேலும் சிதறடிக்கும். அதை அதன் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்புகளை அதிகமாகப் பாதிக்கும்.

புதிய வருகைகளும் புதிய கூட்டணிகளும் தமிழ் வாக்குகளைத் திரட்டுமாக இருந்தால் அது வேறு கதை. இல்லையென்றால், தமிழ்த் தேசிய வாக்குகள் சிதறடிக்கப்படுமாக இருந்தால் என்ன நடக்கும்?

கடந்த இரண்டு ஆண்டுகளாக தன் வாக்கு வங்கியைப் படிப்படியாகக் கட்டி எழுப்பி வருகின்ற தேசிய மக்கள் சக்தியானது வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையோடு உழைக்கும். ஓர் ஆளும் தரப்பாக, அரச வளங்களை உபயோகித்து, அரச திணைக்கள நிகழ்வுகளையும் அரச நிகழ்வுகளையும் பயன்படுத்தி, தேசிய மக்கள் சக்தியானது, தன்னைத் தமிழ்ப் பகுதிகளில் படிப்படியாகப் பலப்படுத்தி வருகிறது. தெற்கில் (20ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சனை மீண்டும் ஒரு முறை மேடை ஏறுமா?

இலங்கையின் வரலாற்றில் ஒரு விடயம் மட்டும் ஆச்சரியமற்ற உண்மையாக தொடர்கிறது அதாவது, தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எவருமே நியாயங்களை புரிந்து கொண்டு தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காணப் போவதில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் ஒரு முறை அது எப்போமே ஆச்சரியமற்ற ஒரு உண்மை தான் என்பதை நிரூபித்திருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை பிற்போடும் அவர்களுடைய அணுகுமுறை அவர்களும் பத்தோடு பதினொன்று தான் என்பதை புரிந்து கொள்ளப் போதுமானது.

யுத்தம் முடிந்த போது, தமிழர் பிரச்சனை தொடர்பில் காண்பிக்கப்பட்ட சர்வதேச கரிசனையும் இப்போது ஒரு சம்பிராதபூர்வமான கரிசனையாக சுருங்கி விட்டது. ஆண்டுகள் தோறும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் உச்சரிக்கப்படும் ஒரு சம்பிராதபூர்வமான அறிக்கையாகி விட்டது. எந்தவொரு நம்பிக்கையும் இல்லாத நிலையிலிருக்கும் ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களுக்கு, இப்போதெல்லாம் சம்பிராதயபூர்வமான அறிக்கைகளே பெரிய ஆறுதலாக இருக்கின்றன.

ஒரு சமூகம் தன்னை நோக்கி மற்றவர்களை ஈர்க்க முடியாமல் இருக்கின்ற போது, இப்படியான சம்பவங்கள் தான் அரசியல் காட்சிகளாக இருக்கும். இவ்வாறானதொரு பின்னணியில் தான், அண்மையில் வெளியானதொரு செய்தி அரசியல் ரீதியில் கவர்ச்சியான ஒன்றாகத் தெரிந்தது. அதாவது, ஹொங் கொங் பல்கலைக்கழகம் ஒன்று, ஈழத் தமிழர்களுக்கான தனிநாடு ஒன்றை உருவாக்குவதிலுள்ள சர்வதேச சட்ட வரம்புகள், தடைகள் தொடர்பில் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுவதற்கான விளம்பரத்தை வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தி ஆச்சரியமாக இருந்தமைக்கு ஒரு காரணம் இருந்தது. அதாவது, அந்த ஆய்வுத் திட்டமானது, நாடு கடந்த அரசாங்கம் என்று அழைக்கப்படும் புலம்பெயர் அமைப்பின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தமை தான்.

நாடு கடந்த அரசாங்கம் என்று அழைக்கப்படும் அமைப்பின் பிரதான நபரான உருத்திரகுமாரன் அமெரிக்காவில் வசித்து வருகின்றார். குறித்த ஹொங் கொங் பல்கலைக்கழமானது ஒரு சீனப் பல்கலைக்கழகம் ஆகும். அவ்வாறாயின் சீனா இந்த விடயத்தை கண்டும் காணாமல் விடுகின்றதா என்னும் கேள்வி எழுவது இயல்பானது தான். இது தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தை கொழும்பிலுள்ள ஊடகமொன்று வினவிய போது அது பல்கலைக்கழக விவகாரம், அது தொடர்பில் தாங்கள் கருத்துக் கூற ஒன்றுமில்லை என்று பதிலளித்திருக்கின்றனர்.

அண்மையில், நேபாளத்தில் திபெத் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்டிருந்த ஆய்வு மகாநாடு ஒன்றை சீனா தடுத்து நிறுத்தியது - ஏனெனில், குறித்த கருத்தரங்கானது, ஒரு சீனா கொள்கைக்கு எதிரானது என்பதே சீனாவின் வாதம். தனது அதிகாரத்தின் மூலம் நேபாள அரசாங்கத்திற்கு நெருக்குதல்களை கொடுத்து, அதனை தடுத்து நிறுத்தியது. சீனாவிலிருந்து பிரிந்து செல்லும் கோரிக்கையை முன்வைத்து தலாய் லாமாவின் தலைமையிலான திபெத் இயக்கம் போராடி வருகின்றது. இந்தியாவில் வாழ்ந்து வரும் தலாய்லாமாவின் வழிகாட்டுதலில் நாடு கடந்த அரசாங்கம் ஒன்றும் அங்கு இயங்கி வருகின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், திபெத்திற்கு ஆதரவான ஆய்வு மாநாடுகளைக் கூட தடுத்து நிறுத்தும் சீனா, இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள புலம் பெயர் அமைப்பு ஒன்றுடன்



இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள, தமிழர்களுக்கான தனிநாடு தொடர்பான ஆய்வு ஒன்றை ஏன் தடுத்து நிறுத்த முற்படவில்லை? .இப்படி ஒரு கேள்வி எழுமானால், அது இயல்பானதே.

ஏனெனில் சீனா அதனை தடுத்து நிறுத்து விரும்பியிருந்தால் அதன் செல்வாக்கை பிரயோகித்திருக்க முடியும். ஏனெனில் ஹொங்கொங் தனியான நிர்வாகத்தை கொண்டிருந்தாலும் கூட அது சீனாவின் ஒரு விசேட நிர்வாகப் பகுதியாகவே இருக்கின்றது. இன்னொரு நாட்டிற்குள் இடம்பெறும் விடயங்களையே கட்டுப்படுத்தும் சீனாவிற்கு தனது அதிகார எல்லைக்குள் இருக்கும் ஹாங்காங் சீன பல்கலைக் கழகம் ஒன்றை கட்டுப்படுத்துவது ஒரு விடயமே அல்ல. இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகிறது

அதாவது, சீனா அதனை ஒரு பல்கலைக்கழக விவகாரமாக தொடர அனுமதிக்கின்றது. ஏன் சீனா அவ்வாறு நடந்து கொள்கிறது ஒரு வேளை எதிர்காலத்தில், தமிழர் பிரச்னையையும் தனது ஆசிய விரிவாக்க அரசிலுக்கான துருப்புச் சீட்டாக பயன்படுத்தலாம் என்று சீனா கருதுகின்றதா? இப்படியான கேள்விகள் எழுவது இயல்பானதே.

இங்கு தமிழர்கள் என்பது ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல மாறாக, இருபது கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஏழரைக் கோடித் தமிழர்கள் என்பதை நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் ஈழத் தமிழர் பிரச்னை இந்தியாவின் அதீத கரிசனைக்குரிய விவகாரமாக மட்டுமே இருந்தது. ஒரு உடனடி அயல்நாடு, தமிழர்களோடு வரலாற்று ரீதியான பிணைப்பைக் கொண்டிருக்கும் நாடு என்னும் வகை தலையீடுகள் இயல்பானது. 1990 களுக்கு பின்னர், ஈழத் தமிழர்களின் அதிக புலம்பெயர்வு, மேற்கு சார்பான பார்வையை தமிழ்ச் சூழலுக்குள் அறிமுகப்படுத்தியது. இதற்கு விடுதலைப் புலிகளின் இந்திய எதிர்ப்பு அரசியல் பிரசாரங்களும் ஒரு பிரதான காரணம். ஒரு தலைமுறையை அது ஆட்கொண்டது. அவ்வாறான பிரசாரங்களால் பாதிக்கப்பட்ட ஒரு தலைமுறையே புலம்பெயர் சூழலில் வாழ்ந்து வருகின்றது.

அன்றைய சூழலில், அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன கடைப்பிடித்த வெளிவிவகார அணுகுமுறையின் விளைவாகவே இந்தியாவின் நேரடித் தலையீடு தூண்டப்பப்பட்டது. ஈழத் தமிழர் பிரச்னைக்கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையானது இன்றுவரையில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இறுதியில் இலங்கை அரசாங்கம், அதனை எதிர்த்து யுத்தம் செய்த விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து இந்தியாவை எதிர்த்தன. ஈழத் தமிழர் பிரச்னைக்கான தீர்வை காணும் இந்தியாவின் முயற்சி தோல்விலேயே முடிவுற்றது. உண்மையான அர்த்தத்தில் அது தமிழர்களின் தோல்வி என்தே உண்மை. மாறி, மாறி ஆட்சியமைத்த அரசாங்கங்கள், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபாட்டை காண்பிக்கவில்லை.

இதன் காரணமாகவே, இப்போதும் அது பேசுபொருளாகவே இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் இந்திய எதிர்ப்பு பிரசாரம் அது இப்போதும் தமிழர்களில் ஒரு பகுதியினா மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் அரசியல் யதார்த்தம் -ஆகியவற்றின் பின்னணியில் நோக்கினால் இந்த விடயத்தின் மீது சீனா ஆர்வம் காண்பித்தால் அதில் ஆச்சரியப்படமுடியாது.

ஆனால் சீனாவின் ஆர்வம் தமிழர் நலன்கள் சம்மந்தப்பட்ட ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்பு அரிதானது - ஏனெனில் அவ்வாறான அரசியல் வெளிப்பாட்டை இதுவரையில் சீனா நிரூபித்ததில்லை.

சீனாவின் நட்பு நாடுகள் நெருக்கடிகளை சந்திக்கும் போது கூட, சீனா அவற்றுக்கு ஆதரவாக களம் இறங்குவதில்லை. ஆனால் ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியடைந்து வரும் பின்னணியில் சீனாவின் அணுகுமுறைகள் எதிர்காலத்தில் மாறாது என்றும் வாதிட முடியாது. சீனா பொதுவாக நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாக் கொள்கையை பிரச்சாரம் செய்து வருகின்ற போதிலும் கூட, தனது நலன்கள் என்று வருகின்ற போது, அதற்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றது. இந்தப் பின்புலத்தில் இலங்கையின் தமிழர் பிரச்னையை சீனா ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முற்பட்டால் ஈழத்தமிழர் பிரச்னை மீண்டும் கவனத்தைப் பெறும்.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விடயம், ஈழத் தமிழர் பிரச்சினையை சீனா ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்த முற்படுமானால், அதன் உண்மையான நோக்கம் என்னவா இருக்க முடியும் என்பதில் தமிழர் பக்கத்தில் தெளிவான பார்வை இருப்பது அவசியம். சீனா ஒரு வேளை ஈழத் தமிழர் விவகாரத்தை கையிலெடுத்தால் அல்லது அதன் மீதான ஆதரவான பார்வை காண்பித்தால் அதற்கு பின்னால் ஒரேயொரு இலக்குத் தான்


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –




இருக்க முடியும். அதாவது தமிழர் அரசியலில் இந்தியாவின் செல்வாக்கை கேள்விக்குள்ளாக்குவது. இப்போது இந்தியா தொடர்பில் எவ்வாறான பார்வைகள் இருப்பினும் ஈழத் தமிழர் அரசியல் தரப்புக்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் இந்தியாவின் ஆதரவையே எதிர்பார்த்திருக்கின்றனர். அதனைத் தாண்டிச் செல்ல முடியாது கூடாது என்றே கருதுகின்றனர். ஆனால் அரசியலில் மாறாத நிலைப்பாடு - நிலைமை என்றுஒன்றில்லை தான்.

எனவே தமிழர் மத்தியில், இந்தியா தொடர்பில் காணப்படும் அதிருப்தியானது, காலப் போக்கில் தங்களுக்கு சாதகமான அரசியல் சூழலை கனியச் செய்யுமென்று, சீனா கருத இடமுண்டு.

அதே வேளை, தென்னிலங்கையில் தங்களுக்கு சாதகமான அரசாங்கம் இல்லாத போது, தங்களின் விடயங்களுக்கு முட்டுக் கட்டைகள் போடப்படும் போது, ஈழத் தமிழரை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி அழுத்தங்களை பிரயோகிக்கவும் சீனா யோசிப்பதற்கு வாய்ப்புண்டு.

ஏனெனில் அவ்வாறான அரசியல் அணுகுமுறையை புதுடில்லி பெருமளவிற்கு தவிர்க்கவே விரும்புகின்றது. இந்தப் பின்புலத்தில் ஈழத் தமிழர்கள் மத்தியில் இந்தியா தங்களுக்கு உதவவில்லை ஆனால் சீனா தங்களின் விருப்பங்களுக்கு செவி சாய்க்கின்றதே என்றவாறான பார்வை ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறான விடயங்களை சீனா கவனத்தில் கொள்ளக் கூடும்.

ஆனால் இதிலுள்ள சிக்கலான விடயம், சீனா அதன் நலனிலிருந்து ஒரு ஆட்டத்தை ஆட முயற்சித்தால், தமிழர் விவகாரமானது உடனடியாக இல்லா விட்டாலும் கூட காலப் போக்கில் மீண்டும் மேடையேறும் நிலைமை ஏற்படலாம்.

ஆனால் அதனை கையாளும் ஆற்றலுள்ள தலைமை தமிழர் பக்கத்தில் இருக்க வேண்டும் அல்லவா அதற்கு என்ன செய்வது? ஆற்றலுள்ள தலைமை இல்லாத போது தமிழர் பிரச்சினை எத்தனை தடவைகள் மேடையேறினாலும் கூட அதன் பயனை தமிழர்கள் அறுவடை செய்யப் போவதில்லை. முன்னரும் அதுதான் நடந்தது.

# முகமது நபி குறித்து பதிவு:- சவுதியில் அனோஜனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை மரண தண்டனையாக மாறியது ஏன்?

முகமது நபி தொடர்பில் பேஸ்புக் ஊடாக தவறான கருத்தை பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சௌதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சிவராசா அனோஜனை விடுதலை செய்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

சிவராசா அனோஜனின் விடுதலைக்கான இராஜதந்திர ரீதியிலான சகல முன்னெடுப்புக்களையும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனின் குடும்பத்தினர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து, ஒரு சில மணி நேரத்தின் பின்னர் உயர்மட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி நடாத்திய சந்திப்பின் போதே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

## சௌதியில் அனோஜனை கைது செய்யக் காரணம் என்ன?

இலங்கையின் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமாக விளங்கும் கதிர்காமத்திற்கு, நாட்டின் வடக்கு பகுதியிலிருந்து குழுவொன்று பாத யாத்திரை சென்றிருந்தது. இந்த பாத யாத்திரை குழுவுடன் சுப்ரமணியம் என்றழைக்கப்படும் நாய் ஒன்றையும், பாத யாத்திரையில் ஈடுபட்டவர்கள் அழைத்து சென்றிருந்தார்கள்.

கல்முனை பகுதி ஊடாக பாத யாத்திரை பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில் சுப்ரமணியம் என்றழைக்கப்படும் நாயின் மீது இஸ்லாமிய இளைஞர் ஒருவர் தாக்குதல் நடாத்தியிருந்தார்.

இந்த இளைஞன் நாயின் மீது தாக்குதல் நடாத்தும் புகைப்படமொன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் நாட்டில் பாரிய பேசுபொருளாகியது. இந்தநிலையில், குறித்த இளைஞன் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, போலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில், குறித்த முஸ்லிம் இளைஞர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நாயின் மீது தான் அறியாமல் தாக்குதல் நடாத்தியதாக தெரிவித்த இளைஞர், பொதுமக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தார். இந்த சம்பவம் தொடர்பிலான விவாதம் சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாக பேசுப் பொருளாகி, பல்வேறு பதிவுகள் பகிரப்பட்டு வந்திருந்தன.

அவ்வாறு பதிவிடப்பட்ட பதிவொன்றில் இஸ்லாமிய நபர் ஒருவர் வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில், அனோஜன் முகமது நபி குறித்து ஆட்சேபனைக்கு உரிய வகையிலான பதிவொன்றை வெளியிட்டு குறுகிய நேரத்தில் அந்த பதிவை அழித்திருந்தார். அவ்வாறு அனோஜன் வெளியிட்ட கருத்தை ஸ்கிரின் ஷாட் எடுத்த சிலர், அதனை பகிர்ந்து, மீண்டும் பேசுப் பொருளாக்கியிருந்தனர்.

அனோஜன் பதிவிட்ட பதிவு அரபு மொழியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு, பகிரப்பட்ட நிலையில், அந்த விடயம் சௌதியில் முறைப்பாடு செய்யும் அளவிற்கு பெரிதாகியது. சௌதி அரேபியாவில் பணி புரிந்து வந்த



சிவராசா அனோஜன், இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த நாட்டு போலீஸாரினால் கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யப்பட்ட அனோஜன், சௌதி அரேபியா நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, அவருக்கு ஐந்து வருட கடூழிய சிறைத் தண்டனையும், 3 மில்லியன் ரியால் அபாராதமும் விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இவ்வாறு அனோஜனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்து, அவரது பெற்றோர் இலங்கை வெளி விவகார அமைச்சின் ஊடாக, சௌதி அரேபியாவில் மேன்முறையீட்டை செய்ய நடவடிக்கை எடுத்திருந்தனர். சௌதி அரேபியாவில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நிலையில் அனோஜனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மரண தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்த நிலையில் சௌதி நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ ஆவணங்கள், சௌதியிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு 20 செப் 2026 கிடைக்கப் பட்டுள்ளதாக இலங்கைக்கான சௌதி அரேபியா தூதுவர் எதிர்கட்சித் தலைவரிடம் உறுதிப்படுத்தும் வீடியோவை, எதிர்கட்சித் தலைவர் அலுவலகம் வெளியிட்டிருந்தது.

அதேவேளை தனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாக அனோஜன், தொலைபேசி ஊடாக தமது குடும்பத்தாருக்கு அறிவித்த நிலையில், இந்த விடயம் தொடர்பான தகவல்கள் வெளியாகி, நாடு முழுவதும் பேசுப் பொருளாகியிருந்தது.

சிவராசா அனோஜனின் விடுதலை தொடர்பில் தற்போது ராஜதந்திர ரீதியில் எதிர்கட்சிகள் மற்றும் ஆளும் கட்சிகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

## ஜனாதிபதியுடன் அனோஜனின் குடும்பத்தினர் சந்திப்பு

சௌதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனின் குடும்பத்தார், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தனர்.

அனோஜன் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை கேட்டறிந்துக் கொண்ட ஜனாதிபதி, அவருக்கு பொதுமன்னிப்பு பெற்றுக் கொள்ள அரசாங்கம் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குடும்பத்தாருக்கு குறிப்பிட்டுள்ளார். அனோஜனின் பொது மன்னிப்பு விவகாரத்தில் அரசாங்கம் ராஜதந்திர மட்டத்தில் தலையீடு செய்வதாகவும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

குறிப்பாக அனோஜனுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு இராஜதந்திர மட்டத்தில் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குடும்பத்தாரிடம் உறுதியளித்துள்ளார்.

## அதிகாரிகளுடன் அவசர சந்திப்பு

சிவராசா அனோஜனின் குடும்பத்தாருடன் கலந்துரையாடல்களை நடாத்திய ஜனாதிபதி, அடுத்த சில மணித்தியாலங்களில் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடலொன்றை நடாத்தியிருந்தார். அனோஜன் தொடர்பில் எடுக்கக் கூடிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து இந்த கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

சிவராசா அனோஜனின் விடுதலை தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய ராஜதந்திர மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

குறித்த இளைஞரின் உயிரைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய எதிர்கால நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சௌதி அரேபியாவிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அவசியமான ராஜதந்திர தலையீடுகளை மேற்கொண்டு எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக தலையீடு மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

## எதிர்கட்சித் தலைவருடன் சந்திப்பு!

சௌதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனின் குடும்பத்தினர், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தனர். இந்த சந்திப்பின் போது, சௌதி அரேபியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனுடன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொலைபேசி மூலம் கலந்துரையாடல்களை நடாத்தியதாக கூறப்படும் வீடியோ ஒன்றை எதிர்கட்சித் தலைவர் அலுவலகம் வெளியிட்டிருந்தது.

தான் இலங்கையிலிருந்து பதிவிட்ட ஒருவரின் பதிவுக்கு பதில் பதிவிட்டமை காரணமாகவே தனக்கு சௌதி அரேபியாவில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அனோஜன், எதிர்கட்சித் தலைவரிடம் கூறியுள்ளார். தனக்கு இலங்கை சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்பட்டால், அதனை தான் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த எதிர்கட்சித் தலைவர், அனோஜனின் விடுதலைக்கான தன்னால் செய்யக் கூடிய அனைத்து முயற்சிகளையும் செய்வதாக இந்த சந்தர்ப்பத்தில் உறுதி வழங்கியிருந்தார்.

தனது மகனான அனோஜன் செய்த தவறை மன்னித்து, அவரை விடுதலை செய்யுமாறு அனோஜனின் தாயான இராசமாணிக்கம் யோகலட்சுமி கோரிக்கை விடுக்கின்றார்.

தனது மகனின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி, எதிர்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரை சந்திப்பதற்காக கொழும்பிற்கு வருகைத் தந்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

சௌதி அரசாங்கத்தை நான் மதிக்கின்றேன். என்னுடைய மகனை விடுதலை செய்து தர வேண்டும். மகன் செய்த தவறை மன்னித்து, அவரை விடுதலை செய்து தர வேண்டும். மகனுக்கு எந்த தண்டனையும் கொடுக்க வேண்டாம். உங்களை மதித்து தான் கண்ணீருடன் வந்திருக்கின்றேன். என்னுடைய மகனை மீட்டு தாருங்கள். எனது மகன் செய்த தவறை மன்னித்து, அவரை மீட்டு தருமாறு கேட்கின்றேன்'' என அனோஜனின் தாயான இராசமாணிக்கம் யோகலட்சுமி தெரிவிக்கின்றார்.

இதேவேளை மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அனோஜன், தான் வெளியிட்ட கருத்து தொடர்பில் அப்போதே வீடியோ ஒன்றை வெளியிட்டு பகிரங்கமாக மன்னிப்பு கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி:- பிபிசி

# திருவிழாக்களில் திரளும் மக்களும் நீதிக்காகத் திரளாத மக்களும்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



செம்மணிப் மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணையைக் கேட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை என்று அழைக்கப்படுகின்ற கட்சிகளின் கூட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பேரணியை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை நோக்கி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கிலான ஒரு பேரணி அது.



யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா மாவட்ட அலுவலகத்தில் இருந்து தொடங்கி கிட்டுப் பூங்காவரையும் அந்தப் பேரணி இடம் பெற்றது. பின்னர் ஒரு பொதுக்கூட்டமும் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த தலைவர்களும். ஒரு மதகுருவும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஓர் அம்மாவும் நிலமீட்புக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் பேசினார்கள்.

ஊர்வலத்தில் 2000க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். பேரணியின் முன்னணியில் எலும்புக்கூடு போல ஆடை அணிந்த நான்கு பேர் காணப்பட்டார்கள். அந்த எலும்புக் கூட்டு ஆடை தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தினால் வெளிநாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்பட்டது. புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர் ஒருவர் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அண்மை மாதங்களாக செம்மணியை முன்னிறுத்தி தமிழ் மக்கள் நீதிகேட்டு முன்னெடுக்கும் போராட்டங்கள் பெரும்பாலானவற்றில் இவ்வாறாக கலையம்சங்கள் இணைக்கப்படுவது நல்ல விடயம்.

கடந்த 30ஆம் திகதி தந்தை செல்வா கலையரங்கில் நடந்த அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நினைவு நாள் நிகழ்விலும் சில ஏற்பாடுகள் கலைத்துவமாக இருந்தன. அதுபோலவே லண்டனில் நடந்த ஒரு போராட்டமும் கலைத்துவமாக சிந்திக்கப்பட்டிருந்தது. இது ஒரு நல்ல முன்னேற்றம். தமிழ் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை இயன்ற அளவுக்கு கலைப் பெறுமதி மிக்கவைகளாகத் திட்டமிடுவது.

சிங்கள மக்கள் சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய தன்னெழுச்சிப் போராட்டங்களில் குறிப்பாக காலிமுகத் திடலில் அமைத்த கோட்டா கோ கம கிராமத்தில் சிங்கள மக்களுடைய கலையுணர்வு அற்புதமாக வெளிப்பட்டது. ஒரு மக்கள் போராட்டத்தை அரசுக்கு எதிரான போராட்டத்தை எப்படி கலையாக வெளிப்படுத்த முடியும் என்பதற்கு அது இந்த பிராந்தியத்திலேயே ஒரு முக்கிய முன்னுதாரணம். தமிழ் மக்களும் சளைத்தவர்கள் அல்ல. ஏற்கனவே சில தசாப்தங்களுக்கு அன்பு தமிழ் மக்களின் எழுச்சியை வெளிப்படுத்திய பொங்கு தமிழ் நிகழ்வுகள் கலையாம்சம் பொருந்தியவைதான். அவை அரங்கச் செயற்பாட்டுக் குழு என்று அழைக்கப்படுகின்ற ஓர் அமைப்பினால் பெருவெளி நாடகங்களாக திட்டமிடப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் உச்சம் எனலாம். அரங்கச் செயற்பாடாகத் தொடங்கி பின்னர் பெருந்திரள் வெகுஜன அரசியல் நடவடிக்கையாகப் பரிணமித்த ஒரு கலை.பண்பாட்டு.




அரசியல் முன்னெடுப்பு அது. எனினும் கடந்த 17ஆண்டுகளாக கட்சிகள் செயற்பாட்டாளர்கள் மக்கள் அமைப்புகள் போன்றவற்றின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் படைப்புத் திறன் ஒப்பிட்டுளவில் குறைவாக இருந்தது.

குறிப்பாக அரசியல் கைதிகளுக்கான போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் போன்றவற்றில் ஒப்பீட்டளவில் கலையம்சங்கள் இருந்தன. கடந்த ஆண்டு செம்மணியில் நடந்த அணையா விளக்கு'' போராட்டத்திலும் கலை பண்பாட்டுணர்வு வெளிப்பட்டது.

அண்மைக் காலங்களில் போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கலை வெளிப்பாடுகளாகச் சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. அதை வரவேற்க வேண்டும். கவன ஈர்ப்பு என்பது தெருக்களின் ஓரங்களில் நின்று அல்லது மக்கள் கூடும் சந்திகளில் நின்று சுலோக அட்டைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்புவது மட்டுமல்ல. அதற்குமப்பால் எதிர்ப்பை எந்த அளவுக்கு காலியாக வெளிப்படுத்தலாம் என்பது முக்கியம்.ஏனென்றால் கலைப் பெறுமதி மிக்க.படைப்புத்திறன் மிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் வெகு சனங்களைக் கவர்ந்து இழுக்கின்றன் ஊடகங்களின் கவனத்தையும் வெளி நாடுகளின் கவனத்தையும் கவர்ந்து இழுக்கின்றன. படைப்புத்திறன் மிக்க போராட்டங்களுக்கு வழமையான போராட்டங்களை விடவும் ஈர்ப்பு அதிகம்.

பாடசாலைகளுக்கு இடையிலான நாடுகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பாக கிரிக்கெட்டில் பிக் மட்ச்களின் போது இரண்டு அணிகளையும் சேர்ந்த ரசிகர்கள் ஆடிப்பாடிக் கூத்தாடுவார்கள். அந்த ஆட்டம் பாட்டங்களில் தாள லயம் இருக்கும். மேளங்கள் இசைக் கருவிகள் இருக்கும். ரசிகர்களை இசை ஒரு மையத்தில் இணைத்து வைத்திருக்கும். அப்படித் தான் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் கலையம்சம் பொருந்திய நடவடிக்கைகள் போராட்டக்காரர்களை ஒரு மையத்தில் இணைக்கின்றன. வெளியில் இருந்து பார்க்கும் பார்வையாளர்களை தங்களின் நோக்கி ஈர்க்கின்றன.

இந்த அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலையம்சங்கள் இணைக்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும். அந்த பேரணியானது கைலாசப் பிள்ளையார் கோவிலில் இருந்து தொடங்கி நல்லூர் வீதி வழியாக கிட்டுப் பூங்காவை வந்தடைந்தது. அதற்கு முதல் நாள்தான் நல்லூர் திருவிழா முடிவடைந்திருந்தது. நல்லூர் சூழலில் பந்தல்களும் கடைகளும் அகற்றப்படாத வீதிகளின் வழியே ஊர்வலம் நகர்ந்து வந்தது. இந்த இடத்தில் நல்லூர் தேர் திருவிழாவையொட்டி முகநூலில் பகிரப்பட்ட ஓர் ஒப்பீட்டை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பிரம்மாண்டமான சனத் தொகையைத் திரட்டக் கூடிய சக்தி இரண்டு பேர்களுக்கு இருந்தது என்றும். முதலாவதாக வேலை கையில் வைத்திருக்கும் முருகப்பெருமானுக்கும். இரண்டாவதாக வேலுப்பிள்ளையார் பெற்றெடுத்த மகனுக்கும் மட்டும் தான் இருந்தன என்று அந்தப் பதிவு கூறுகிறது.

அந்தப் பதிவின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கோவிலின் ஒரு பகுதியைச் சுற்றிக் கொண்டு போன அந்த ஊர்வலமானது பிரம்மாண்டமானது இல்லைத் தான். அதில் இரண்டாயிரத்துக்கும் குறையாதவர்கள் பங்பற்றினார்கள்.

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சில நடவடிக்கைகளில் மட்டும் தான் மக்கள் அதிகமாகத் திரண்டிருக்கிறார்கள். குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிவண்டி வரையிலுமான

(18ம் பக்கம் பார்க்க)

# தாக்கப்பட்டோம்! ஆனால் மண்டியிடவில்லை! ஐ.நா.வில் டிரம்ப் முன்னிலையில் ஈரான் அதிபர்!

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றிய ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியன், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீது கடுமையான குற்றச் சாட்டுகளை முன் வைத்தார். ஈரானிய பொதுமக்கள் மற்றும் உள்கட்ட மைப்புகள் மீது இரு நாடுகளும் சட்டவிரோதத் தாக்குதல்களை நடத் தியதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரானை அழித்து விடுவோம் என மிரட்டியதாகக் கூறப்பட்ட நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையில் பெஷெஷ்கியன் தனது உரையில் கடுமையான கருத்துகளை முன்வைத்தார்.

நாங்கள் பயங்கரவாதத்தால் பாதிக்க ப்பட்டவர்கள். ஈரான் பயங்கரவாத த்தை ஆதரிக்கும் நாடு என்ற குற்றச் சாட்டை நிராகரித்த பெஷெஷ்கியன், ஈரானே பயங்கரவாதத்தால் பாதிக்கப் பட்ட நாடு என்று கூறினார்.

அமெரிக்க அதிபர் எங்களை பயங்கர வாதிகள் என்று வர்ணித்தார். ஆனால் நாங்கள் பயங்கரவாதத்தால் பாதிக்கப் பட்டவர்கள் என்று அவர் தெரிவித் தார். மேலும், ஈரான் தனது மக்களு க்காக சுதந்திரமாகவும் பாதுகாப்பாக வும் வாழ விரும்புகிறது என்றும், மத்திய கிழக்கில் நிலவும் நிலையற்ற தன்மைக்கு ஈரானே காரணம் என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது என் றும் அவர் கூறினார்.

பெஷெஷ்கியன் தனது உரையைத் தொடங்கும்போது, போரின் தொடக்க நாளில் உயிரிழந்த குழந்தைகளின் புகைப்படங்களை கையில் ஏந்தியிரு ந்தார். மினாபில் உள்ள ஷஜராத் அல்–தய்பா பள்ளி மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 156 பேர் உயிரிழந்ததாக அவர் குறிப்பிட்டார். உயிரிழந்த குழந்தைகளின் புகைப் படங்களுடன், அதே காலகட்டத்தில் உயிரிழந்த முன்னாள் ஈரான் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனியின் புகைப்படத்தையும் அவர் காட்டினார்.

அதே நாளில் விளையாட்டு அரங்கம்



ஒன்றின் மீது அமெரிக்கா நடத்தியதா கக் கூறப்படும் தாக்குதலையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

ஈரானிடம் உள்ள இராணுவத் திறன் கள் பிற நாடுகளைத் தாக்குவதற்காக உருவாக்கப்படவில்லை என்றும், நாட்டைப் பாதுகாப்பதற்காக மட் டுமே பயன்படுத்தப்படுகின்றன என் றும் பெஷெஷ்கியன் கூறினார்.

ஈரானிய பொதுமக்கள் மற்றும் நாட் டின் உள் கட்டமைப்புகள் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்குதல் நடத்தியதாக அவர் குற்றம் சாட்டி னார். அதே நேரத்தில், ஈரான் மற்ற நாடுகளின் மீது தாக்குதல் நடத்த விரும்பவில்லை என்றும், தனது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய் வதே அதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

பெஷெஷ்கியன் உரையாற்றிக் கொண் டிருந்தபோது ஐ.நா. பொதுச் சபை யில் இருந்த அமெரிக்கத் தூதுக் குழுவினர் அவையை விட்டு வெளி யேறினர். அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடுமையான பதற்றம் நிலவி வரும் சூழலில், இந்த வெளி நடப்பு கவனத்தை ஈர்த்தது.

ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர் பான சர்ச்சைக்கும் அவர் தனது உரையில் முக்கியத்துவம் அளித்தார். அணுசக்தி தொடர்பான அறிவும் தொழில்நுட்பமும் சில நாடுகளின் தனிப்பட்ட உரிமையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை ஈரான் ஏற்றுக்கொள்ளாது என்று அவர் தெரிவித்தார்.

மேலும் ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்சினைக்கு இராணு வத் தீர்வு கிடையாது என்றும், பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத் தின் மூலமே தீர்வு காண முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேலை விமர்சித்த அவர், அணு குண்டு இஸ்ரேலில் உள்ளது, ஆனால் அணுசக்தி தொடர்பான ஆய் வாளர்கள் ஈரானில் உள்ளனர் என் றும், இஸ்ரேல் கொலை செய்கிறது, ஆனால் ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன'' என் றும் கூறினார்.

ஹோர்முஸ் ஜலசந்தி தொடர்பாகவும் ஈரான் அதிபர் தனது நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்தினார். தனது நாட்டின் கடல் எல்லைகளுக்குள் கூட கப்பல் போக்குவரத்து தொடர் பான ஈரானின் உரிமையைப் பறிக்க யாரையும் அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

உலகின் முக்கியமான கடல் வர்த்தகப் பாதைகளில் ஒன்றாகக் கருதப்படும் ஹோர்முஸ் ஜலசந்தி தொடர்பான எந்தவொரு பதற்றமும் பிராந்தியத் திலும் சர்வதேச அளவிலும் தாக்க த்தை ஏற்படுத்தக்கூடியதாக இருப்ப தால், அவரது இந்தக் கருத்து கவனத்தை பெற்றது.

மத்திய கிழக்கு நாடுகளின் பாதுகாப்பு குறித்து பேசிய பெஷெஷ்கியன், எந்த ஒரு நாடும் தனியாக முழுமையான பாதுகாப்பை அனுபவிக்க முடியாது என்று கூறினார்.

இந்தப் பிராந்தியத்தில் யாரும் தனி யாகப் பாதுகாப்பை அனுபவிக்க முடி யாது. நாம் ஒன்றிணைந்து பாது காப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். இல்லையெனில், ஒன்றாகவே பாது காப்பின்மையை எதிர்கொள்ள வேண் டியிருக்கும்என்று அவர் தெரிவித்தார்.

உரையின் இறுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு நேரடி யாகச் செய்தி ஒன்றை பெஷெஷ்கியன் வெளியிட்டார்.

வன்முறை மற்றும் மிரட்டல் மொழி க்கு பதிலாக ஈரான் உரையாடல், இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார் த்தைக்கு தயாராக இருப்பதை அமெ ரிக்காவும் தன்னை மிரட்டுபவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

இறுதியாக, ஆம், அவர்கள் எங்க ளைத் தாக்கினார்கள் ஆனால் நாங்கள் மண்டியிடவில்லை என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

ஈரான்அமெரிக்கா இடையே ஏற்க னவே நிலவி வரும் பதற்றமான சூழலில் ஐ.நா. பொதுச் சபையில் பெஷெஷ்கியன் ஆற்றிய இந்த உரை, ஈரானின் நிலைப்பாட்டை சர்வதேச அரங்கில் மீண்டும் வலியுறுத்திய முக்கிய உரையாக அமைந்தது.

# ஒன்றைச் சொல்லில் உலக அளவில் பேசு பொருளான கனடாவாழ் தமிழ் மகள் மைத்ரேயி இராமகிருஷ்ணன்!



தற்போது சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படும் பெயர்களில் ஒன்றாக ஈழத்தை பின்புலமாக கொண்ட கனடா வாழ் மைத்ரேயி ராமகிருஷ்ணன் மாறியுள்ளார்.

கனேடிய நடிகையான மைத்ரேயி இராமகிருஷ்ணன், தனது அடை யாளம் தொடர்பில் தெரிவித்த கருத்து கள் தற்போது விவாதப்பொருளாக மாறியுள்ளது. அவர் தனது அடை யாளம் தொடர்பில் தெரிவித்த கருத்து கள்

மைத்ரேயி இராமகிருஷ்ணன் வழங்கி யதாகக் கூறப்படும் நேர்காணல்களில், தனது இன மற்றும் கலாச்சார அடையாளம் குறித்து வெளிப்படை யாகப் பேசியதாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன. தன்னை ஈழத் தமிழ் பெண்ணாக அடையாளப்படுத்திக் கொள்வதில் பெருமை கொள்வதாக அவர் நேர்காணலொன்றில் குறிப்பிட்டு ள்ளார். மேலும், தனது குடும்பம் இலங்கையைச் சேர்ந்தது என்றாலும், தன்னை வெறுமனே இலங்கையர் என அடையாளப்படுத்துவதற்குப் பதிலாக, தன்னை ஈழத் தமிழர் என்று முன்னி றுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். இதே போன்று, Best of the Best திரைப் படத்தில் இடம் பெற்றதாகக் கூறப் படும் ஒரு வசனத்தை மாற்றுமாறு அவர் கோரியதாகவும் கூறப்படுகின் றது.

Best of the Best திரைப்படத்தில் இடம் பெற்ற தமிழ் இலங்கை பெண் என்பதற்குப் பதிலாக, நான் தமிழ், எனது குடும்பம் இலங்கையைச் சேர்ந் தது என்ற கருத்தை வெளிப்படுத்தும் வகையில் மாற்றம் செய்யுமாறு கோரிய தாகக் கூறப்படுகிறது.

மைத்ரேயியின் கருத்துகள் வெளியாகி யதைத் தொடர்ந்து, சமூக வலைத் தளங்களில் சில சிங்கள இனவாதிகள் பல்வேறு விதமான எதிர்மறையான கருத்துக்களை பதிவிட்டு வருகின்ற னர். புலம்பெயர் ஈழத் தமிழர்கள் உள்ளிட்ட சிலர் அவரது சுய அடை யாள உரிமைக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவர்களின் பார்வையில், உள்நாட்டுப் போர், இடம்பெயர்வு

(20ம் பக்கம் பார்க்க)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கை பயணப் பரபரப்புக்குள், உள்ளூர் ஊடகங்களில் அதிகம் கவனத்துக்கு வராமல் போன ஒரு முக்கியமான விடயம், அமெரிக்காவின் சமஷ்டி கடல்சார் ஆணைக்குழுவின் தலைவர் லாரா டி பெல்லாவின் கொழும்பு பயணமாகும்.

அமெரிக்க வர்த்தக நலன்களை மேம்படுத்துவதும், இந்தோ-பசுபிக் பிராந்திய சந்தைகளுக்கான அமெரிக்க வணிகங்களின், கப்பல் போக்குவரத்து இணைப்புகளை பலப்படுத்துவதுமே அவரது இந்த பயணத்தின் முக்கிய நோக்கம்.

கொழும்பு துறைமுகம் உலகளாவிய வர்த்தகத்தில், குறிப்பாக கொள்கலன் பரிமாற்றத்தில் வகிக்கும் முக்கிய பங்கினை அங்கீகரித்தல் கொழும்பு சர்வதேச கடல்சார் மாநாட்டில் சிறப்புரையாற்றுதல், இலங்கை அரசாங்கம் மற்றும் கடல்சார் துறையின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்து, இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடுதல்... இவை அவரது பயணத்தின் போது பிரதான விடயங்களாக இருந்தன.

அமெரிக்கசமஷ்டி கடல்சார் ஆணைக்குழு என்பது அமெரிக்காவின் சர்வதேச கடல்வழிப் போக்குவரத்துக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக, 1961 இல் நிறுவப்பட்ட ஒரு சுதந்திரமான முகாமையாகும்.

அமெரிக்க ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கம். ஆனால், அமெரிக்க சமஷ்டி கடல்சார் ஆணைக்குழுவின் நேரடிப் பணி வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒழுங்கு முறையாக இருந்தாலும், லாரா டிபெல்லாவின் இலங்கை வருகை மற்றும் சமஷ்டி கடல்சார் ஆணைக்குழுவின் செயல்பாடுகளுக்குப் பின்னால், மிக முக்கியமான மூலோபாய மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு நோக்கங்கள் மறைந்திருந்தன.

கொழும்பு துறைமுகம் வழியாகச் செல்லும் 80சதவீதத்துக்கும் அதிகமான கொள்கலன்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு மறு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

செங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் கடற்கொள்ளை அல்லது புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாக, வர்த்தகக் கப்பல்கள் பாதிக்கப்படும் போது, நுகர்வோருக்கான விநியோகச் சங்கிலி அறுந்து போகும் அபாயம் உள்ளது.

கொழும்பு போன்ற முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் உறுதி செய்வது, உலகப் பொருளாதாரப் பாதுகாப்புக்கு அவசியமாகும். அமெரிக்காவின் இந்தோ--பசுபிக் பிராந்தியக் கொள்கையின் ஒரு முக்கிய அங்கமாக, லாரா டி பெல்லாவின் இந்தப் பயணம் அமைந்திருந்தது.

இந்தியப் பெருங்கடலில் கடல்சார் வர்த்தகப் பாதைகள் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும், இருப்பதை உறுதி செய்ய இலங்கை போன்ற நாடுகளின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது. இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத் திட்டங்களில் சீனாவின் முதலீடுகள் மற்றும் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

கடல்சார் உள்கட்டமைப்புகளில் ஒரு நாட்டின் ஏகபோக உரிமை, பிராந்தியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறக்கூடும் என்பதால், அமெரிக்கா தனது வர்த்தக மற்றும் கடல்சார் ஒழுங்குமுறை நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, இலங்கையுடன் உறவை வலுப்படுத்தி ஒரு மூலோபாய சமநிலையை உருவாக்க முயற்சிக்கிறது. அதன் அடிப்படையில் தான் இலங்கையில் முறையான, வெளிப்படையான போட்டி மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துமாறு லாரா டிபெல்லா கொழும்பில் உரையாற்றும் போது வலியுறுத்தியிருந்தார்.

துறைமுகங்களின் பாதுகாப்பு





மற்றும் நிர்வாகத்தில் சட்டவிரோதப் பணப்பரிமாற்றம், கடத்தல் அல்லது ஒருதலைப்பட்சமான கட்டுப்பாடுகள் வராமல் தடுக்க இத்தகைய சட்டக் கட்டமைப்புகள் பாதுகாப்புக் கேடயமாக இருக்கும்.

கடத்தல்களைத் தடுப்பதற்கும் இது பெரிதும் உதவியாக உள்ளது. அது தவிர வேறு பல்வேறு பாதுகாப்பு அம்சங்களையும் அமெரிக்கா உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

அத்துடன் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத் திட்டத்தில் 600 மில்லியன் டொலர்களை முதலீடு செய்வதற்கு ஜோ பைடன் அரசாங்கம் முன்வந்திருந்தது. அதானி குழுமத்துடன் இணைந்து அந்த நிதியை செலவிட தீர்மா

யாத சூழல் அமெரிக்காவுக்கு இருக்கிறது. வெளிப்படையாக அதனை செய்ய முயன்றால், இருதரப்பு உறவுகள் குழப்பமடையும். உள்நாட்டு குழப்பங்கள் தீவிரமடையும். அது தவிர பிற பூகோள அரசியல் பிரச்சினைகளையும் உருவாக்கும். அதனால் அமெரிக்கா நேரடியாக கொழும்பு துறைமுகத்தை பாதுகாப்பு தேவைகளுக்கு பயன்படுத்த முடியாது.

ஆனாலும் சிவில் விநியோக தேவைகளுக்காக அதனைப் பயன்படுத்துவதற்கு முற்படுகிறது.



**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**

பாதுகாப்பான துறைமுகமாக கொழும்பு இருக்கும் வரை தான், அதனை செய்ய முடியும். அதற்காகவே அமெரிக்கா அதிகளவில் முயற்சிக்கிறது.

கொழும்பின் மீதான பூகோள அரசியல் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில், கொழும்பு துறைமுகத்தை தன் கைக்குள் வைத்துக் கொள்வதற்கான எல்லா முயற்சிகளையும் அமெரிக்கா முன்னெடுக்கிறது.

இது அமெரிக்காவின் சமஸ்டி கடல்சார் ஆணைக்குழுவின் முக்கிய

# கொழும்பு மீதான அமெரிக்காவின் கரிசனை

லாரா டிபெல்லாவின் பயணம், பொருளாதார முகமூடி அணிந்திருந்தாலும், இது இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பிராந்திய பாதுகாப்பு நலன்களோடு மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டதாக இருந்தது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அதன் இன்றைய நவீன பாதுகாப்புக்கு மூலோபாயத்தில் இலங்கைக்கு, குறிப்பாக கொழும்பு துறைமுகத்திற்கு, முக்கிய இடத்தை வழங்கியிருக்கிறது. கொழும்பு துறைமுகத்தின் மூலோபாய முக்கியத்துவம் முன்னெபோதும் இல்லாதளவிற்கு அதிகரித்திருக்கிறது.

அதற்கு முக்கிய காரணம், கொழும்பு துறைமுகம் வழியாகச் செல்லும் அமெரிக்க சரக்குகளின் அளவாகும். இதனால், கொழும்பில் ஏற்படும் முன்னேற்றங்களில் சமஷ்டி கடல்சார் ஆணைக்குழு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது.

தற்போது அமெரிக்காவுடன் தொடர்புடைய, சுமார் 30 பில்லியன் டொலர் மதிப்பிலான, சுமார் 5 இலட்சம் கொள்கலன் சரக்குகள் கொழும்பு துறைமுகம் வழியாகச் செல்கின்றன. இதனால், கொழும்பு துறைமுகத்தை பாதுகாப்பானதாக, செழிப்பானதாக வைத்திருப்பதற்கு அமெரிக்கா தன்னாலான முயற்சிகளை முன்னெடுக்கிறது அதற்காக, கொழும்பு துறைமுகத்தை நவீன மயப்படுத்துவது, அதனை பாதுகாப்பானதாக மாற்றுவது, அதன் வசதிகளை அதிகரிப்பது போன்றவை, அமெரிக்காவின் முன்னுரிமைக்குரிய விடயங்களாக இருக்கின்றன.

கொழும்பு துறைமுகத்தை பாதுகாப்பானதாக மாற்றுகின்ற நோக்கில், அமெரிக்கா பல உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. பல மில்லியன் டொலர் பெறுமதியான ரேடார்கள், கொடையாக வழங்கப்பட்டுள்ளன. கொள்கலன்களை சோதனையிடுவதற்கும்,

னிக்கப்பட்டிருந்த போதும், அமெரிக்காவில் அதானி மீதான வழக்கு தொடரப்பட்டதை அடுத்து, அந்தத் திட்டத்தில் இருந்து அமெரிக்கா பின்வாங்கியது. இப்போது அமெரிக்கா அந்த நிதியை வேறு வழிகளில் முதலீடு செய்வதற்கு திட்டமிட்டு வருகிறது.

கொழும்பு துறைமுகம் பாதுகாப்பானதாக மாற்றப்படுவதன் ஊடாக, அமெரிக்காவுக்கான சரக்கு போக்குவரத்து சீரானதாகவும் சிக்கலின்றியும் தொடர்வதை உறுதிப்படுத்த விரும்புகிறது.

அமெரிக்காவுக்கு இப்போது பல முனை அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஈரான் மீதான தாக்குதலுக்கு பின்னர், அமெரிக்கா தனது விநியோக சங்கிலி அறுந்து விடக்கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா உருவாக்கியிருந்த இராணுவ விநியோக சங்கிலி பாதுகாப்பற்றதாக மாறிவிட்டது. ஈரானின் ஏவுகணைகளும் ட்ரோன்களும் அவற்றின் பாதுகாப்பற்றதாக்கி விட்டன அல்லது அழித்து விட்டன.

இதனால் அமெரிக்கா ஒரு கட்டத்தில், போருக்கான வளங்களை திரட்டுவதும், வழங்குவதும் கூட சிக்கலானதாக மாறியது.

ஒரு கட்டத்தில் அந்த விநியோக சங்கிலியை தொடர்ந்து பேணுவதற்கு, டியாகோ கார்சியாவில் உள்ள தளத்தை பயன்படுத்த வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. இது விநியோக நேரத்தை அதிகரிக்கச் செய்தது.

அதை விட கொழும்பு துறைமுகத்தை பயன்படுத்துவது, அமெரிக்காவுக்கு சுலபமானது. ஆனால், இலங்கையின் புவிசார் அரசியல் சூழலும் வெளிவிவகாரக் கொள்கையும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை.

பாதுகாப்புத் தேவைக்காக கொழும்பு துறைமுகத்தை பயன்படுத்த முடி

கவனத்திற்குரிய விடயமாக உள்ளது. 8ஆவது கொழும்பு சர்வதேச கடல்சார் மற்றும் தளவாட மாநாட்டில் உரையாற்றிய லாரா டிபெல்லா, சில விடயங்களை மிகத்தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க சரக்குகளுக்கான ஒரு முக்கிய இடைமாற்று மையமாக கொழும்பின் மூலோபாய முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது. கொழும்பு துறைமுகத்தில் உட்கட்டமைப்பு மேம்பாடு மட்டும் போதுமானதாக இருக்காது.

கடல்சார் துறையில் போட்டி ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, சமஷ்டி கடல்சார் ஆணையம் போன்ற ஒரு நடைமுறைப்படுத்தல் பொறிமுறையை உள்ளடக்கிய, ஒரு வலுவான போட்டி கட்டமைப்பை இலங்கை நிறுவ வேண்டும். பாதுகாப்பு அரண்களை அமைக்க வேண்டும். ஒரு போட்டிப் பிரிவை நிறுவ வேண்டும்.

கொழும்பில், போட்டி நிலவி செழித்து வளர்வதை உறுதி செய்ய உங்களுக்கு ஏதேனும் ஒன்று தேவை.

புத்தாக்கம், முதலீடு மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்குப் போட்டி அவசியம்.


போட்டி நல்லது. போட்டி அனைவரையும் ஒருவருக்கொருவர் கடுமையாகப் போட்டியிட வைக்கிறது.

ஒரு போட்டிச் சூழல் அதிக முதலீட்டையும் புத்தாக்கத்தையும் ஊக்குவிக்கும். அந்நிய மூலதனத்தை ஈர்ப்பதற்கு, மேலும் கணிக்கக்கூடிய ஒரு வணிகச் சூழல் அவசியம்.


முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் இடர்களை நாடு குறைக்க வேண்டும். அதிக அந்நிய முதலீட்டை அனுமதிப்பதற்காக, உங்கள் வணிகச் சூழலில் உள்ள இடர்களை நீங்கள் குறைக்க வேண்டும்.

(20ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கை யாளர்களை அனுசரித்து செல்வது நல் லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நினை த்த காரியத்தை செய்து முடிப்ப தில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பண தேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவரகளுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# திருவிழாக்களில் திரளும் மக்களும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) பேரணியைச் சுட்டிக்காட்டலாம். அடுத்ததாக, இரண்டு எழுக தமிழ்களைச் சுட்டிக் காட்டலாம். இவைதவிர தேர்தல் திருவிழாக்களின் போது கட்சிகள் காசைக் கொட்டி,வாகனங்களை விட்டு,ஜனங்களை அள்ளிக் கொண்டு வருகின்றன. அங்கேயும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவதுண்டு.

இவைதவிர, வழமையான கவன ஈர்ப்பு நடவடிக்கைகளின் போது அல்லது அரசுக்கு எதிரான பேரணிகளின போது பெருந்திரள் மக்களைக் காண முடிவதில்லை, பெருந்திரள் மக்களை ஒரு மையத்துக்குக் கொண்டு வருவது என்று சொன்னால் முதலாவதாக மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய கட்டமைப்புகள் இருக்கவேண்டும். இரண்டாவதாக அதற்கு ஒரு பட்ஜெட் உண்டு. காசு இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் காசு வேண்டும்.

ஒரு காலம் இருந்தது, தொழிற்சங்க உறுப்பினர்கள் சந்தாப் பணம் செலுத்தி தொழிற்சங்கத்தின் பொது நிதியை பலப்படுத்துவது என்ற ஒரு போக்கு. அல்லது தொண்டர்கள் தாமாக முன்வந்து தங்களுடைய உழைப்பைத் தியாகம் செய்து அர்ப்பணிப்போடு வேலை நேரத்தில் போராட்டங்களில் ஈடுபடுவார்கள். போராட்டங்களில் ஈடுபட்டதாலேயே வேலைகளை இழப்பார்கள். அது ஒரு காலம். இப்பொழுது வொலன்டியர்ஸ். தன்னார்வலர்கள் என்று வருபவர்களுக்குக் காசு கொடுக்க வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளின் போதும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் காசு கொடுக்க வேண்டும் சுவரொட்டிகளைக் கிழிப்பதற்கும் காசு கொடுக்க வேண்டும். இது உலகப் பொதுவான ஒரு போக்கு. அரச சார்பற்ற நிறுவனங்களின் எழுச்சிகளின் பின்னணியில் வொலன்டியரிசம் எனப்படுவது காசு கொடுத்துச் செய்வதாக மாறிவிட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் ஊர்வலங்களுக்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வரும்போது முதலாவதாக பயண ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் பின் அவர்களுக்குச் சிற்றுண்டிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிலசமயம் தங்குமிடத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாமே செலவுதான். எல்லாமே காசுதான். காசு இல்லை என்றால் போராட்டம் இல்லை என்ற ஒரு நிலை. இதை மறுவளமாகத் திருப்பிக் கேட்டால், காசை அள்ளிவீசத் தயாராக இருப்பவர்கள் துணிந்து அரசியலில் இறங்கலாமா?

இப்படிப்பட்டதோர் சமூகப் பொருளாதார, அரசியல் பின்னணிக்குள்,கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியானது, பிரம்மாண்டமானது இல்லையென்றாலும் பொருத்தமான நேரத்தில், பொருத்தமான எதிர்ப்பை அது வெளிப்படுத்தியது என்பது உண்மை. இது ஜெனிவா கூட்டத் தொடரின் காலம். 63ஆவது ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணிகள் கடந்த சனிக்கிழமை ஜனநாயகத் தமிழ்க் தேசிய கூட்டமைப்பு சாவகச்சேரியில் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது. இரண்டு ஆண்டு கால அனுர ஆட்சிக்கு எதிராக அந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதுவும் சிறிய அளவிலான ஒரு கவன ஈர்ப்புப் போராட்டம் தான். அங்கேயும் ஆயிரக் கணக்கில் மக்கள் திரளவில்லை.

அதுபோலவே அதே நாளில்,வெடுக்கு நாறி மலையயில் பிக்குகள் தலைமையில் ஒரு வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டக்கூடும் என்று எதிர்பார்ப்போடு போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள்.த மிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் அங்கே காணப்பட்டார்கள்.

தமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தமது தலைமுறைகளின் எதிர்கால வாழ்வையும் தீர்மானிக்கக்கூடிய தமது அரசியலைக் குறித்து தமிழ் மக்கள் உணர்திறன் குறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதனை இவை காட்டுகின்றன. பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் களிப்பூட்டும் நிகழ்வுகளிலும் ஆயிரக்கணக்கில் திரளும் தமிழ் மக்கள்,பெருந் திருவிழாக்களில் லட்சக் கணக்கில் திரழும் தமிழ்மக்கள், ஏன் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசியல் நடவடிக்கைகளில் சிலசமயம் நூற்றுக்கணத்தில் கூடத் திரள்வதில்லை?

முருகனும் வேலுப்பிள்ளையாரின் மகனும் தான் இந்த மக்களைத் திரட்டலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டாமல், தமிழ்மக்கள் ஓர் அரசுபோல சிந்தித்துச் செயற்படாமல், நீதிக்கான போராடத்தில் உலக அரசுகளை எப்படித் திரட்டுவது?

# நியூயோர்க்கில் நிறுவப்பட்ட இலவச கழிப்பறை:-

(22ம் பக்கத் தொடர்ச்சி) விதி உள்ளது. அதாவது, கழிவறைக்கு உள்ளே சென்றுவிட்டால் 10 நிமிடத்திற்குள் வேலையை முடித்துவிட்டு வெளியே வந்துவிட வேண்டும். கழிவறையை பயன்படுத்த தொடங்கியதில் இருந்து கவுண்ட் டவுன் ஓடத் தொடங்கி விடும். 5 நிமிடங்கள் ஆனவுடன் ஒரு ஆடியோ எச்சரிக்கை வரும். தொடர்ந்து 8வது நிமிடத்தில் மீண்டும் ஒரு எச்சரிக்கை வரும்.

இதைத் தொடர்ந்து 10வது நிமிடத்தில் கடைசியாக ஒரு எச்சரிக்கை ஒலிக்கும். அதன் பிறகு சில வினாடிகளில் கழிப்பறையின் கதவு தானாக திறந்து விடும். இத்தகைய நவீன தொழில் நுட்பம் கொண்ட இந்த கழிப் பறையை நியுயார்க் நகரில் நிறுவுவது தொடர்பான அறிவிப்பை நியுயார்க் மேயர் சோஹ்ரான் மம்தானி வெளியிட்டார்

இது குறித்து அவர் கூறுகையில், கழிப்பறைகள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளோம். கழிப்பறை என்பது செல்போனில் ஸ்கோரல் செய்து கொண்டிருக்கும் இடமாக இருக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

இந்த நவீன கழிப்பறை திட்டத்திற்காக நியுயார்க் நகர நிர்வாகம் சுமார் 4 மில்லியன் டாலர் செலவு செய்துள்ளதாக அவர் கூறினார். இத்தகைய கழிப்பறைகளை நிறுவுவதற்கு முன்னதாக, இது குறித்து ஆய்வுகளும் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

அதாவது சராசரியாக ஒரு நபர் மூன்றரை நிமிடங்கள் கழிப்பறையை பயன்படுத்துகிறார் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும், எனவே 10 நிமிடங்கள் என்பது பெரும்பாலான நபர்களுக்கு போதுமான நேரமாகவே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைமைத்துவ வெற்றிடமும் அவலங்களும்

சரியான அரசியல் தலைமைத்துவத்தை கட்டமைக்க முடியாத – சரியான அரசியல் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்ய முடியாத, ஒரு மக்கள் கூட்டத்தினால் மேல் எழ முடியாது. இது ஈழத்தமிழருக்கும் பொருந்தும்.

அண்மைய நாட்களில், சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்படும், வெளிப்படுத்தப்படும் ஏமாற்றம், கோபம், கொந்தளிப்புகளுக்கான காரணம் இது தான்.

2009ம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ் மக்களுக்கு சரியானதொரு அரசியல் தலைமைத்துவம் கிடைக்கவில்லை. கடந்த காலத்தில் இருந்து என்னென்ன பாடங்களை கற்றுக் கொள்கிறோம் என்பது முக்கியமானது.

போருக்குப் பின்னரான 17 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியல், தேய்ந்து செல்லும் ஒன்றாக மாறியிருக்கிறது.

2004இல் 22 பிரதிநிதிகளுடன் இருந்த தமிழ்த் தேசிய அரசியல், இன்று பிரதிநிதித்துவ எண்ணிக்கையில் மாத்திரமன்றி, பிரதிநிதிகள் தெரிவுகள் விடயத்திலும் கோட்டை விட்டு நிற்கிறது.

தமிழரின் பிரதிநிதித்துவம் இப்போது, சிங்களத் தேசியக் கட்சிகளின் கையில் குடுமியைக் கொடுத்தவர்களாலும், தமது கடமைகளை மறந்தவர்களாலும் நிரம்பியிருக்கிறது என்பது தான் அவலம்.

கடந்த 17 ஆண்டு கால தலைமைத்துவம் என்பது சிறப்பானதாக இருந்திருந்தால், இவ்வாறானதொரு சூழலுக்குள் சிக்கும் நிலை தமிழருக்கு ஏற்பட்டிருக்காது. கடந்த 12ஆம் திகதி அநுராதபுரத்தில் நடந்த ஒரு பேரணி, சிங்கள மக்கள் மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்தியதோ இல்லையோ, தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விரக்தியை, வெறுப்பை, கோபத்தை தூண்டியிருப்பதை சமூக ஊடகங்களில் நிரம்பியிருக்கும் கருத்துக்கள் காட்டுகின்றன.

இவ்வாறான நிலை தமிழர்களுக்குப் புதியதல்ல. கடந்த காலங்களில் பலர் இப்படி குறுக்கே சென்று, அதிகாரத்தை சுவைத்திருக்கிறார்கள். சலுகைகளுக்கு மயங்கியிருக்கிறார்கள். ஆனால் கடைசியில் அவர்கள் யாரும் தமிழ் மக்களால் மதிக்கப்படுகின்ற நிலையில் இல்லை.தங்களின் முகவரிகளை தொலைத்து விட்டு நிற்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக முற்று முழுதாக ஆதாயம் தேடிக் கொண்டது சிங்கள பௌத்த பேரினவாதம் தான். இப்போதும் அப்படியானதொரு முறை வந்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்ட மக்களின் தவறாகிப் போன தெரிவு, வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் தங்களின் தலையில் அடித்துக் கொள்ள வைத்திருக்கிறது.

அந்தளவுக்கு மக்கள் தங்களின் தெரிவில் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

கடந்த இரண்டுஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்ட மக்களின் பிரதிநிதித்துவம் குறித்த அதிருப்தி மக்களிடம் அதிகம் இருக்கிறது. இதனை யாரும் மறுக்க முடியாது.

கூட்டங்களை குழப்புவது, தவறான கருத்துருவாக்கங்களை ஏற்படுத்துவது, சொற்பிரயோகங்கள், நடத்தைகள் என எல்லாமே மக்களை வெறுப்புக்குள் தள்ளியிருக்கின்றன. இவ்வாறான சூழலை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இப்படியெல்லாம் நடந்து கொள்வார் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. இந்தச் சூழலில் தான் இது வெறும் நாடகமா என்று அவர்களே சந்தேகிக்கிறார்கள்.

சரியானதொரு தலைமைத்துவத்தை உருவாக்கத் தவறி விட்டதும், சரியான பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்வதில் இழைக்கப்பட்ட தவறுகள் தான் இந்த நிலைக்கான அடிப்படைக் காரணம். தமிழர்களுக்கான அரசியல் என்பது, தமிழர்களுக்காக அரசியல் செய்பவர் களால் மாத்திரமே சாத்தியமாகும்.

கடந்த காலங்களில் தமிழர்களுக்கான அரசியலை முன்னெடுப்பதாக கூறிக் கொண்ட பலர் தங்களுக்கான அரசியலை முன்னெடுத்தனர்.

சிங்கள அரசியல் கட்சிகளுக்கான அரசியலை முன்னெடுத்தனர். அவ்வாறான திசையிலேயே இன்றும் சிலர் மாறிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர் அரசியல் தமிழர்களால் தமிழர்களுக்காக கட்டமைக்கப்பட வேண்டும். அது சுயநலத்தை கடந்ததாக, தமிழர் நலனை மட்டும் மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். அத்தகைய ஒரு தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான பிரதிநிதித்துவத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தோல்விகளே மிஞ்சியிருக்கின்றன.

இந்த தோல்விகள் தமிழர்களின் தவறுகளால் மட்டும் ஏற்பட்டதல்ல. தமிழர்களை தவறான முடிவுகளை எடுக்கத் தூண்டும் புலனாய்வு மற்றும் உளவியல் போர் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகவே, அந்த முடிவு அந்த தரப்புகளால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனை இலக்கு வைத்தே பலவிதமான உத்திகள் வகுக்கப்பட்டன.

அதற்கு மக்களின் வாக்குகள் பலிக்கடா ஆக்கப்பட்டன. இது ஒட்டுமொத்தத்தில் ஒரு மிகப்பெரிய சதி. அதற்குள் தமிழர்கள் சிக்கிக் கொண்டார்கள் என்பதே சரியானது. தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் தொடர்பான முன்போக்கு சிந்தனைகள் இல்லாத தமிழ்ச் சூழலை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களின் வாக்குகள் ஏமாற்றிப் பறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சூழல் இன்று வரை தொடர்கிறது.




தமிழர்களுக்கு என சரியான ஒரு தலைமைத்துவம் உருவாக விடாமல் தடுப்பதே, இவர்களின் நோக்கம்.

இந்த இலக்கை அவர்கள் எட்டினால், எதிர்காலத்தில் கூட தலைமைத்துவம் இல்லாத இனமாக தமிழர்கள் மாற்றப்படுவார்கள்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒரு காலத்தில் அரசாட்சி செய்தார்கள், தங்களின் நிலம், தங்களின் பொருளாதாரம், தங்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கும் வல்லமையோடு இருந்தனர்.

ஆனால், இன்று தமிழர்களின் நிலம் பறிக்கப்படுகிறது. வழிபாட்டு உரிமை பறிக்கப்படுகிறது. வாழ்வுரிமையும், அரசியல் உரிமைகளும் இழக்கப்படுகின்றன. அனைவரும் சமத்துவமாக வாழுகின்ற சூழல் உருவாக்கப்பட்டிருப்பதாக ஒரு மாயத் தோற்றத்துக்குள் இவை அனைத்தும் முற்றும் முழுதாக மறைக்கப்படுகின்றன.

இந்தச் சூழல் தான் ஆபத்தானது. இத்தகைய ஓர் ஆபத்துக்குள் தமிழர்களை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது இந்த இரகசிய போர். இந்த இரகசியப் போரில், வழங்கப்பட்ட பாத்திரங்களை பலர் மிகத் திறமையாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பார்வையாளர்களாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த காட்சிகளால் அவ்வப்போது அதிர்ச்சிகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடுகிறது. இந்த காட்சிகளில் வரும் திருப்பங்களை அவர்களால் எதிர்பார்க்க முடியவில்லை. அது ஏமாற்றத்தை கொடுக்கிறது.

இவ்வாறான அதிர்ச்சிகள், தமிழ் மக்களின் உளவியலை இன்னும் இன்னும் சிதைக்கிறது. தங்களுக்கென ஒரு தலைமைத்துவம் இல்லாததையிட்டு அவர்கள் திரும்பத் திரும்ப நொந்து கொள்கிறார்கள்.

இனிமேல் ஒரு கட்டுக் கோப்பான தலைமைத்துவம் வரப் போவதில்லை என வெறுப்புடன் கூறிக் கொள்கிறார்கள்.

இது இந்த வெறுமை நிலையை தொடர்ந்து நீடிக்க செய்வதற்கே உதவும். இந்த நிலையை மாற்ற வேண்டும்.

புதியதொரு தலைமைத்துவம் கட்டி எழுப்பப்பட வேண்டும். அதன் மூலமாகவே, தமிழர்களின் அரசியல் உரிமைகளை மீண்டும் நிலை நிறுத்தக் கூடிய ஒரு சூழல் உருவாகும்.

ஜனநாயக அரசியல் பாரம்பரியங்களில் ஊடாக, அந்த தலைமைத்துவத்தை கட்டி எழுப்புகின்ற முயற்சிகள் இன்னமும் இல்லை.

ஒவ்வொரு முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்ற போது, அது கீழே இழுத்து விழுத்தப்படுகிறது.

இது தான் இன்றைய தமிழ்ச் சூழல்.

இந்த தமிழ் அரசியல் சூழலையும் தொடர்ந்து தக்க வைப்பதற்கு, பல நடிகர்கள் களம் இறக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் இன்றைய நிலை பற்றி, தமிழ் மக்கள் சிந்தித்து – செயற்பட முடியாதபடி தங்கள் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்துகிறார்கள்.

அவற்றை சமூக ஊடகங்களில் பரப்பி மக்களின் கவனத்தை முழுமையாக தங்களின் பக்கம் இழுத்து கவனக் குவிப்பை தடுக்கிறார்கள்.

தமிழ் மக்கள் இதனைப் புரிந்து கொண்டாலும், அடுத்த கட்டம் பற்றி சிந்திக்க முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்

நன்கு கைதேர்ந்த புலனாய்வுப் போர் அல்லது இரகசிய போர் இப்படித்தான் முன்னெடுக்கப்படும்.

இது அடிமைப்படுத்தப்பட்ட ஓர் இனத்தை மீண்டெழ விடாமல் தடுப்பதற்கான ஓர் இரகசிய போர்.

இது தமிழ் மக்களை முற்றும் முழுதாக ஆக்கிரமிக்கிறது. சிந்திக்க – செயற்பட விடாமல் தடுக்கிறது.

இது தமிழ் மக்களில் ஒரு பகுதியைக் கனவில் மிதக்க செய்து, கற்பனையான பிரச்சினைகளை உருவாக்கி, யதார்த்த அரசியலின் ஊடாக தீர்க்க வேண்டிய பிரச்சினைகளில் இருந்து அவர்களை விலகியோட வைக்கிறது.

அதற்கான ஒவ்வொரு முயற்சியும் நன்கு திட்டமிடப்பட்டு அரங்கேற்றப் படுகிறது. அதனைத் தான் அநுராதபுரம் பேரணியில் அரங்கேறிய நாடகங்களும் உணர்த்துகின்றன.

# இளையராஜா என்றும் ராஜா தான்!



இளையராஜாவின் இசையில் உருவான மராத்தி திரைப்படம் 'கோந்தல்'... ஆஸ்கர் போட்டியில் இந்தியாவின் அதிகாரப்பூர்வ தேர்வாகி உலக கவனத்தை ஈர்த்துள்ளது!

இந்திய சினிமாவின் மிக முக்கியமான இசையமைப்பாளர்களில் ஒருவரான இளையராஜா இசையமைத்துள்ள மராத்தி திரைப்படம் 'கோந்தல்' (Gondhal). 2027ம் ஆண்டு நடைபெற உள்ள 99வது ஆஸ்கர் விருது விழாவுக்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ தேர்வாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த சர்வதேச திரைப்படம் (Best International Feature Film) பிரிவில் இந்தியாவின் சார்பில் ஆஸ்கர் விருது போட்டிக்குள் இப்படம் நுழைந்துள்ளது. கிராமிய கலாச்சாரத்தை மையமாக உருவான 'கோந்தல்'

அறிமுக இயக்குநரான சந்தோஷ் திவாகர் இயக்கியுள்ள இந்த திரைப்படம், மகாராஷ்டிராவின் பாரம்பரிய வாழ்க்கை முறையையும், அங்கு நடைபெறும் பழமையான 'கோந்தல்' என்ற நாட்டுப்புற கலை மற்றும் வழிபாட்டு சடங்குகளையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இஷிதா தேஷ்முக், கிஷோர் கதம், யோகேஷ் சொஹோனி உள்ளிட்டோர் நடித்துள்ள இந்த படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார்.

திரையரங்குகளில் வெளியான 'கோந்தல்' திரைப்படம், தொடர்ந்து பல்வேறு திரைப்பட விழாக்களில் கவனம் பெற்றதுடன், விமர்சகர்களிடமும் பாராட்டுகளை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 56வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI), இப்படத்தின் இயக்குநர் சந்தோஷ் திவாகர் சிறந்த இயக்குநருக்கான வெள்ளி மயில் விருதை வென்று படத்தின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தினார்.

பல தசாப்தங்களாக இந்திய இசை உலகில் தனி முத்திரை பதித்து வரும் இளையராஜா, பெரிய நட்சத்திரங்களின் திரைப்படங்கள் மட்டுமின்றி, புதிய இயக்குநர்களின் முயற்சிகளுக்கும் தனது இசையின் முழுமையான பங்களிப்பை வழங்கி வருகிறார்.


படத்தின் கதை, கதாபாத்திரங்களின் உணர்வு, காட்சிகளின் தாக்கம் ஆகிய வற்றை தனது இசை மூலம் வலுப்படுத்துவது இளையராஜாவின் தனிச்சிறப்பாக பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் பெரிய விளம்பர பின்னணி இல்லாத 'கோந்தல்' போன்ற மராத்தி திரைப்படத்திற்கும் பாடல்கள் மற்றும் பின்னணி இசையில் தனது தனித்துவமான பாணியை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு பிராந்தியத்தின் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பேசும் திரைப்படம் சர்வதேச அளவிலான ஆஸ்கர் போட்டியில் இடம் பிடிப்பதில், இளையராஜாவின் இசையும் முக்கியமான பலமாக அமைந்துள்ளது.

சிறிய பட்ஜெட் படமாக இருந்தாலும் தரமான இசைக்கு முக்கியத்துவம்... அறிமுக இயக்குநரின் படைப்பை உலக அரங்கிற்கு கொண்டு சென்ற இசைஞானியின் பங்களிப்பு என முழு இளையராஜா ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் மகிழ்ச்சிகளை தெரிவிக்கின்றனர்.

தற்போது 'கோந்தல்' திரைப்படம் ஆஸ்கர் விருதுக்கான சர்வதேச திரைப் படத் தேர்வு நடைமுறையில் பங்கேற்கிறது.



இந்த பிரிவில் முதற்கட்டமாக 15 திரைப்படங்கள் கொண்ட குறும் பட்டியல் தேர்வு செய்யப்படும். அதன் பின்னர் இறுதியாக 5 திரைப்படங்கள் ஆஸ்கர் விருதுக்கான பரிந்துரைகளாக அறிவிக்கப்படும்.

99வது ஆஸ்கர் விருது விழா 2027ம் ஆண்டு மார்ச் 14ம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ளது.

தமிழ் சினிமாவை தாண்டி பல மொழி திரைப்படங்களிலும் தனது இசை மூலம் ரசிகர்களை கவர்ந்து வரும் இளையராஜாவின் பயணத்தில், 'கோந்தல்' திரைப்படத்தின் ஆஸ்கர் தேர்வு மற்றொரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

அது மட்டுமின்றி, தற்போது செப்டம்பர் 25ம் தேதி வெளியாகவுள்ள கார்த்திக் சுப்புராஜின் 'டோரதி' படத்திற்கும் இளையராஜா இசையமைத்துள்ளார். அந்த படமும் சர்வேதச அளவிலான டொரோண்டோ ஃபிலிம் ஃபெஸ்டிவலில் திரையிடப்பட்டு அங்குள்ள ரசிகர்களிடமும் பெரும் வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

மொழி, பட்ஜெட், இயக்குநரின் அனுபவம் என எந்த எல்லைகளையும் பார்க்காமல், கதையின் உயிரை உணர்ந்து இசையமைக்கும் இளையராஜாவின் திறமைக்கு 'கோந்தல்' திரைப் படம் மீண்டும் ஒரு சான்றாகியுள்ளது.

## கொழும்பு மீதான அமெரிக்காவின் கரிசனை

(17ம் பக்கத் தொடர்ச்சி) வணிக விரிவாக்கத்திற்குத் தலைமை தாங்க முயற்சிப்பதை விட, அரசாங்கம் ஓர் ஊக்குவிப்பாளராகச் செயற்பட வேண்டும். இலங்கையின் கடல்சார் பொருளா தாரத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் தனியார் துறைக்கு ஒரு பெரிய பங்கு இருக்க வேண்டும். வணிகத்தையே முன்னிலைப்படுத்த அனுமதிக்க வேண்டும். விரைவான விரிவாக்கத்திற்கான தற்போதைய வாய்ப்பு காலவரையின்றி நீடிக்காது. கொழும்பு எதையாவது சாதிக்க வேண்டிய நேரம் இது. இந்தத் தற்காலிக வாய்ப்பு நீடிக்காது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

லாரா டி பெல்லாவின் உரை யில் கூறப்பட்ட விடயங்கள் கவனிப்புக்குரியவை. இலங்கையிடம் இருந்து அமெரிக்கா எதனை எதிர்பார்க்கிறது என்பதை, அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவசரமான மாற்றத்திற்கு தயாராக வேண்டும் என அவர் அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த அவசர மாற்றத்திற்கு இலங்கை தயாராகுமா? அது உடனடி சாத்தியமா? என்பதை விட, அரசாங்கம் தனித்து தீர்மானிக்குமா, அல்லது தன் பிராந்திய சர்வதேச கூட்டாளிகளுடன் சேர்ந்து தீர்மானிக்கப் போகிறதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## பலவீனமான அத்திபாரத்தில் பலமான மேற்கட்டுமான

(21ம் பக்கத் தொடர்ச்சி) அடிக்கட்டுமானமொன்றி லிருந்து மட்டுமே சமூகத்தின் மேற்கட்டுமானம் உறுதிப்படுத்தப்படவேண்டும். பலவீனமான அடித்தளத்திலுள்ள மேற்கட்டுமானம் எப்போதும் சரியலாம். எடுத்துக்காட்டாக இன்றைய உயர் நுகர்வுக் கலாசாரத்தின் பிரதான தூணான புலம்பெயர்ந்தோரின் நிதியானது அடுத்துவரும் சந்ததி மாற்றங்களுடன் படிப்படியாக வற்றிவிடக் கூடும். எனவே அந்த இடத்தை எதிர்காலத்தில் தாங்கிப்பிடிப்பதற்கும் எப்போதும் உறுதியாக இருப்பதற்குமான அடிக்கட்டுமானத்தை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் அவசியம் மட்டுமன்றி அவசரமானதும் என்பதை யாழ்ப்பாண சமூகம் மட்டுமன்றி ஒட்டுமொத்தத் தமிழ் சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

## அனுராதபுரத்துப் பேரணி உணர்த்துவது என்ன?

(12ம் பக்கத் தொடர்ச்சி) அது எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளுவதன் மூலம் எதிர்க்கட்சிகளை அம்பலப்படுத்துவதன் மூலம் தனது வாக்கு வங்கியை பலப்படுத்த முயற்சிக்கின்றது.

ஒரு புறம் தமிழ்த் தேசிய வாக்கு வங்கி குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வாக்குத் தளம் உடைக்கப்படும் ஆபத்து தெரிகிறது. இன்னொரு புறம், தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி சிந்தாமல் சிதறாமல் இருக்கப் போகிறது. எனவே மாகாண சபைத் தேர்தல் என்று ஒன்று நடந்தால், அதில் புதிய வருகைகளும் புதிய கூட்டுக் களும் பலப்படுமாக இருந்தால், குறிப்பாக,தமிழ்த் தேசிய பேரவையும் சிறீதரன் அணியும் புலம் பெயர்ந்த தமிழ் ஊடக முதலாளியும் ஒன்றாகத் திரண்டால், தமிழரசுக் கட்சி மேலும் பின்னடைவுகளைச் சந்திக்கலாம். எனினும், தமிழரசுக் கட்சியோடு இப்பொழுது சினேகிதமாக இருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். அவர்கள் கொழும்பை நோக்கி மட்டும் கேட்கவில்லை, இந்தியாவை நோக்கியும் அதே கோரிக்கையை முன்வைத்து வருகிறார்கள். நடக்குமோ நடக்காதோ என்று இன்றுவரை நிச்சயமாகத் தெரியாத ஒரு தேர்தலில், தமது வாக்காளர்கள் எப்படி முடிவு எடுப்பார்கள் என்பதை மிகச் சரியாகக் கணித்த பின் தான் அவர்கள் அவ்வாறு கேட்கிறார்களா?

## விடுதலைப்புலிகள் அமைப்பை உடைத்தது...

(7ம் பக்கத் தொடர்ச்சி) அரசாங்கத்தை இலங்கை - இந்திய ஒப்பந்தம் முற்றாக முடக்கிப் போட்டது. நான் அந்த நிலையை மாற்றி, முடக்கத்தை உடைத்தெறிந்தேன். உண்மையைச் சொன்னால், ஜே.ஆர். இந்திய ஒப்பந்தத்திற்குள் முடக்கப்பட்டிருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பை அரசியல் ரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் உடைத்தது நான் தான். விடுதலை புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மானை பிரித்து ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டு வந்தேன். ஆனால், கருணாவை தேசிய அரசியலில் நேரடியாக இணைத்துக் கொண்டது மஹிந்த ராஜபக்ஷ தான்.

எவ்வாறாயினும் பிரேமதாச பயங்கரவாத அமைப்பில் இருந்தவரைத் தம்மிடம் எடுத்தது போல் நான் தான் விடுதலைப் புலிகள் அமைப்பை இரண்டாகப் பிளவுபடுத்தினேன். மறு புறம் சந்திரிக்கா, கருணாவைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதுடன் இவர்கள் அனைவரையும் பயன்படுத்தி இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பை மஹிந்த ராஜபக்ஷ அழித்தார்.

நாட்டில் கொடூர யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த வேளையில் ஜே.வி.பி அமைப்பானது விடுதலைப் புலிகளுக்கு நிகராக மகா சங்கத்தினரையும் இராணுவத்தினரையும் கொன்று குவித்தது. அந்தக் காலத்தில் தான் 'ஜே.ஆரைக் கொல்லுங்கள்' என்ற பதாதைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன என்றார்.

## ஒன்றைச் சொல்லில் உலக அளவில் பேசுபொருளான..


(16ம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் குடும்ப வரலாறு போன்ற காரணிகள் ஒருவரின் அடையாள உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று அவரது கருத்து தனியுரிமை சம்மந்தப்பட்டது என்றும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். எனவே, மைத்ரேயி தன்னை ஈழத் தமிழ் பெண்ணாக அடையாளப் படுத்திக் கொள்வது அவரது தனிப்பட்ட உரிமை என அவர்கள் வாதிடுகின்றனர்.

மைத்ரேயி இராமகிருஷ்ணனைச் சுற்றியுள்ள சர்ச்சை, ஒரு திரைப்பட நடிகையின் கருத்தாகத் தொடங்கி அடையாளம் மற்றும் வரலாறு குறித்த பரந்த உரையாடலாக மாறியுள்ளதாக சமூக வலைத்தளப் பதிவுகள் காட்டுகின்றன. மைத்ரேயியின் கருத்துகளைத் தொடர்ந்து, Best of the Best திரைப்படம் தொடர்பில் இணையத்தில் எதிர்மறையான விமர்சனங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, IMDb தளத்தில் திரைப்படத்துக்கு எதிராக திட்டமிட்ட மதிப்பீடுகள் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது எனினும் திரைப்படத்தின் மதிப்பீடுகள் திட்டமிட்டு குறைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கு நம்பகமான தரவுகள் மற்றும் சுயாதீனமான ஆதாரங்கள் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை.

# பலவீனமான அத்திபாரத்தில் பலமான மேற்கட்டுமான வாழ்க்கை முறையை யாழ்ப்பாணச் சமூகம் எவ்வாறு தக்க வைத்து வருகிறது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



அண்மையில் யாழ் நகரில் மஞ்சள் என்ற பெயரில் தொடங்கப்பட்ட ஆடம்பரமான உணவகம் ஒன்றின் முன்னால் வரிசையில் மக்கள் கூட்டமாக நிற்கும் படம் ஒன்றுடன் திலீபன் இன்னும் பசியோடு தான் இருக்கிறான் என்ற முகநூல் பதிவொன்று சிந்திக்க வைத்தது.




அத்துடன் மூன்று மாடிகளில் வேறுபட்ட வகையிலமைந்த அவ்வுணவகத்தின் ஆடம்பரமான உள்ளமைப்பையும் யு ரியுப் ஒன்று விளம்பரப்படுத்தியதையும் காணமுடிந்தது. இதேபோல தற்போது இங்கு நடைபெற்று வருகின்ற திருமண நிகழ்வுகள், மஞ்சள் நீராட்டு விழாக்கள், கோயில் திருவிழாக்கள் பலவற்றின் பிரமாண்டங்களையும் அன்றாடம் நாம் பார்க்க முடிகின்றது.

மறுபுறத்தில் தமது உரிமைகளுக்கான மக்களின் அரசியல் போராட்டங்களுக்கு அப்பால் வறுமை, வேலையின்மை, அடிப்படை வசதிகளின் சீரின்மை போன்றவற்றால் இங்குள்ள ஒரு பகுதி மக்கள் அல்லற்படுவதையும் அன்றாடம் காண முடிகின்றது. இக்காட்சிகள் எமது சமூகத்திலுள்ள பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிப்பதுடன் மட்டுமன்றி இங்குள்ள பலவீனமான சமூக அடிக்கட்டுமானம் ஒன்றின் மேல் பலமான மேற்கட்டுமான வாழ்க்கை முறையொன்று தொடர்ந்து நிலைபெற்று வருவதையும் காட்டுகின்றது.

சமூகமொன்றின் அடிக்கட்டுமானங்கள் என்பது அதன் உற்பத்தி உறவு முறைகளுடன் தொடர்புபட்டது. பொருளாதாரம் சார்ந்த உற்பத்தி மூலதனம், தொழில்வாய்ப்பு, தொழில் நுட்பம், இவற்றுடன் இணைந்த ஏனைய அடிப்படையான வாழ்வாதார மூலங்கள் போன்றவற்றை ஒட்டுமொத்தமாகக் குறித்து நிற்கிறது. சமூகத்தின் மேற்கட்டுமானம் என்பது அதன் கல்வி, மதம்,கலை, பண்பாடு, அரசியல், சட்டம், சமூக நிறுவனங்கள் மற்றும் வாழ்க்கை முறை போன்றவற்றைக் குறித்து நிற்கிறது. யாழ்ப்பாண சமூகத்துக்குரிய இவ்விரண்டு கட்டுமானங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பலமற்ற அத்திவாரமொன்றில் பகட்டான பலவடுக்கு மாளிகையொன்று கட்ட்டுப்பட்டிருப்பது போன்ற நிலையை அறியமுடியும்.

பாரிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களோ அன்றி அதனுடன் தொடர்புபட்ட தொழிற்றுறையோ இங்கு இல்லை. இருக்கும் சிறு,குறு கைத்தொழில்கள் கூடப் பெரிதாக வளர்ச்சியடைந்தவை என்று கூற முடியாது. ஆனால் முன்னேறிய கைத் தொழில் சமூகமொன்றுக்குரிய வாழ்க்கை முறை பரவலாக இங்கு உள்ளது. உள்நாட்டு யுத்தத்திற்கு முன்னிருந்த சீமெந்து மற்றும் இரசாயனத் தொழிற்சாலகளும் ஒரு சில நடுத்தரக் கைத்தொழில்களும் கூட தற்போது இல்லை. அதுமட்டுமன்றி அக்காலத்தில் செழிப்புடன் இருந்த விவசாயம் குறிப்பாகப் பணப் பயிர்களின் உற்பத்தி, நாடு முழுக்க பரந்திருந்த யாழ்ப்பாணிகளின் வர்த்தகம் மற்றும் மீன்பிடித் தொழில் கூட தற்போது நலிவடைந்த நிலையிலே உள்ளது. ஆனால் மக்களின் வாழக்கை முறை மட்டும் முன்பிருந்ததை விட இன்னும் உயர்ந்த மட்டத்திலேயே உள்ளது.

நகரங்களிலும் உள்ளூர்க் கிராமங்களிலும் வேறுபாடின்றி நாளாந்தம் உருவாகிவரும் ஆடம்பரமான மாடி வீடுகள், நவீன பல்பொருள் அங்காடிகள், ஆங்காங்கே அடிக்கடி முளைக்கும் பீட்சா,கே.எவ்.சி போன்ற உடனடி உணவுக் குடில்களுடன் மஞ்சள் போன்ற நவீன உணவகங்கள், நவீன ஆடையகங்கள், வீதியெங்கும் வாகன விற்பனைக் காட்சிக் கூடங்கள், நாணய மதிப்பிறக்கம் மற்றும் வரியுயர்வுகளின் மத்தியிலும் நாளாந்தம் வடக்கு நோக்கிவரும் நூற்றுக் கணக்கான புதிய கார் வகைகள், புதிது புதிதாக உருவாகும் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், கிராமியக் கடவுள்களுக்கான குடில்கள் பெரிய கோவில்களாகவும் பெரிய கோவில்கள் வானுயர்ந்த கோபுரங்கள் பலவற்றுடன் பலகால் மண்டபங்களாகவும் விரிதல் போன்ற பல மாற்றங்களுடன் விசேட நிகழ்வுகளில் மட்டுமன்றி மக்களின் அன்றாட வாழ்க்கை முறையும்கூட வளர்ந்த ஒரு பொருளாதாரச் சமூகத்துக்குரியதாக மாறி விட்டுள்ளது.

மாறிவரும் உலகின் கோலங்களுக்கிசைவாக இவ்வாறு விருத்தியடைவது என்பது இயல்பானது என்றாலும் யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்து இதனுடன் தொடர்புடைய இரண்டு விடயங்கள் கவனத்திற்குரியவையாக உள்ளன. ஒன்று இந்த விருத்திகளுக்கான பிரதான உள்ளீட்டு வழங்கல் எவையும் இங்கிருக்கவில்லை. அது கட்டிடம் என்றாலும் சரி கடைத்தொகுதி என்றாலும் சரி எல்லாமே வெளியிலிருந்து தான். இவற்றுக்கான உள்ளீடுகளில் குறைந்தது 10 சதவீதமேனும் வழங்குவதற்கான தொழில்துறைகள் கூட இங்கு உருவாகவில்லை. இந்த வகையில் உற்பத்திசாராத உயர்ந்ததொரு நுகர்வுக் கலாசாரத்தையே இச்சமூகம் கொண்டுள்ளது. இது வானத்தில் கூரை அமைக்கும் ஒரு செயற்பாடுதான். இரண்டாவது இந்த உயர்ந்த நுகர்வுக் கலாசாரத்தின் வளர்ச்சி வேகம். இது வளர்ந்து வரும் பொருளாதார சமூகமொன்றில் இயல்பாக ஏற்படும் மாற்றத்தைவிடப் பல மடங்கு உயர்வானது.

பகல் முழுக்கக் கட்டிவிட்ட ஒரு நாயை மாலையில் அவிழ்த்து விடும் போது அது நாலுமுறை வீட்டைச் சுற்றிவந்து துள்ளிக் குதித்து விட்டு ஒரு இடத்தில் படுப்பதைப் போல, நீண்ட கால யுத்தத்தின்பின்னர் திறந்த விடப்பட்ட ஒரு சூழலில் இவ்வாறு மக்களின் நடத்தைகள் அமையும் என்பது உண்மையெனினும் யுத்தத்துக்கு முன்னரான யாழ்ப்பாணச் சமூகமும் பலவீனமான அடிக்கட்டுமானத்தையும் பலமான மேற்கட்டுமானத்தையும் கொண்ட ஒரு நுகர்வுச் சமூகமாகத் தான் இருந்தது.

அன்றைய சமூகத்திலும் கைத்தொழில்துறைகள் பெரிதாக வளர்ச்சியடைந்திருக்கவில்லை. விவசாயம், வர்த்தகம், கல்வி என்பனவே அன்றைய நுகர்வுக் கலாசாரத்துக்கான பிரதான அடிப்படைகள். அன்றைய யாழ்ப்பாண சமூகத்தின் பிரதான முதலீடே கல்வி தான். அது கவர்ச்சிகரமான ஒரு துறையாக அக் காலத்தில் பொறியியலாளர்கள் மட்டுமன்றி இலிகிதர் என்று அழைக்கப்பட்ட எழுதுவினைஞர்களும் அரசபதவிகளை நிறைத்து அன்றைய யாழ்ப்பாணத்து வியாபாரிகள் போல நாடு முழுக்க ஆதிக்கம் செலுத்தினர். ஓய்வுதியமும் அரச சம்பளமும் சமூகத்துக்குப் பலம் கொடுத்தன. கல்வியில் தரப்படுத்தல், 1983 இனக்கலவரம், சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான இனவொடுக்கல் உத்திகள் எல்லாம் இணைந்து அன்றைய யாழ்ப்பாணத்தவரின் பொற்காலத்தை பித்தளையாக மாற்றி விட்டது என்பதுதான் உண்மை.

இன்றும் யாழ்ப்பாண சமூகத்தின் பிரதான முதலீடு கல்வியாகத்தான் உள்ளது. ஆனால் அது மாறிவரும் சமூகப் பொருளாதார கட்டமைப்புக்கு ஏற்றவாறு மாற்றப்படாது பெருமளவுக்கு பழைய பாதையிலே பயணஞ்செய்ய முனைகிறது. அரச பதவிகள் மட்டுப்படுத்தப்பட்டு விட்டன மட்டுமன்றி அவை கவர்ச்சிகரமற்றவையாகவும் மாறி விட்டன. எனவே கல்வி எமக்கானதாகவும் எல்லோருக்கானதாகவும் மாற்றப்பட வேண்டும். எமக்கானது என்பது எமது மூலவளங்களை எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்துமானது என்பது ஒரு சிலருக்குக் கிடைக்கக்கூடிய உயர்வாண்மைத் தொழில்களுக்காக எல்லா மாணவர்களையும் இளைஞர்களையும் பட்டி கட்டுவதை விடுத்து பிரதேசத்தின் தேவைகளுக்கேற்பவும் தனிநபர் திறன்களுக்கேற்பவும் கல்வி பரவலாக்கப்படவேண்டும்.

அது தொழில்சார் திறன்கள் விருத்திக்கு முக்கியம் தரவேண்டும். வடக்கில் தற்போது பலதுறைகளில் தொழிலாளர்க்கான தேவையும் உள்ளது. அதேபோல வேலையின்மையும் உயர்வாக உள்ளது. இவற்றுக்கிடையில் இசைவு ஏற்படவேண்டுமெனில் கல்வியில் மட்டுமல்ல சமூகத்தின் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டியது கட்டாயமானது.

முன்னரைப் போலவே பலவீனமான அடிக்கட்டுமானமும் பலமான மேற்கட்டுமான நுகர்வுக்கலாசாரமும் இப்போது இங்கு காணப்பட்ட போதும் அதனைத் தாங்கும் காரணிகள் பெரிதும் மாறிவிட்டன. பணப் பயிர்ச் செய்கை வர்த்தகம் அரச பதவிகள் என்பன தற்போது தமது வகிபாகத்தை இழந்து விட்டன. அவற்றின் இடத்தை இன்று புலம்பெயர்ந்தோரின் நிதி உட்பாய்ச்சல்கள் பிடித்துக் கொண்டுள்ளன. புலப்பெயர்ந்தோரின் நிதியில் சிறிய பகுதி மட்டுமே வாழ்வாதாரத்துக்கும் சிறிய தொழில் முயற்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. எதிர்காலத்தில் இது தலைகீழாக மாற்றப்படவேண்டும்.

அதாவது அந்நிதியில் பெரும்பகுதி மீள்உற்பத்திக்கான முதலீடுகளிலும் அதற்கான தொழிற்றிறன் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் விருத்திக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் எய்தப்படும் பலமான(20ம் பக்கம் பார்க்க)

# செங்கடலில் “ஆதிக்கம்” செலுத்தும் ஏமனின் ஹவுதி இயக்கம் உருவெடுத்த கதை!

வறுமையும் பசியும் வறண்ட நிலப் பரப்பும் கொண்ட ஒரு தேசத்தில் இருந்து உருவெடுத்த ஒரு சக்தி, சர்வதேச வர்த்தகத்தின் நரம்பு மண்டலமான செங்கடலையே முடக்கும் என்று உலக அரசியல் வல்லுநர்கள் கணித்திருக்க மாட்டார்கள். ஏமனின் வட மேற்கு மலைப் பகுதிகளில் தங்களின் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாக்க உருவெடுத்த 'அன்சார் அல்லாஹ்' (ஹவுதிகள்) இயக்கம் இன்று வல்லரசுகளையே திணற வைக்கிறது.

ஏமனின் வரலாறு 1,000 ஆண்டுகளுக்கும் மேலானது. வடமேற்கு சடா மாகாணத்தில் வாழும் 'ஜைதி' இஸ்லாமியர்களின் வரலாற்றுப் பின்னனியில் இந்த இயக்கம் பிறந்தது. ஏமன் மக்கள் தொகையில் 35 சதவீதம் ஜைதிக்கள். சடா மாகாணத்தில் தான் பெரும்பாலான ஜைதி மக்கள் வசிக்கிறார்கள்.

ஏமன் காலம் காலமாக அங்குள்ள 'ஜைதி இமாமத்' ஆட்சியில் இருந்தது. 1962ல் ஏற்பட்ட குடியரசு புரட்சியால் ஜைதிகளின் அரசியல் அதிகாரம் பறி போனது. 1990களில் சவுதி அரேபியாவின் ஆதரவோடு வஹாபிசக் கருத்துகள் பரவிய போது தங்கள் பாரம்பரிய ஜைதி அடையாளத்தைக் காக்க 1992ல் ஹுசைன் பத்ருத்தீன் அல்-ஹவுதி 'இளைய விசுவாசிகள்' என்ற அமைப்பைத் தொடங்கினார்.

2003 ஈராக் போரின் போது ஏமன் அரசின் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டைக் கண்டித்து மக்களைத் திரட்டி ஹுசைன் போராடினார். 2004ல் ஏமன் ராணுவம் அவரை சுட்டுக் கொன்றது. அவரது நினைவாக இந்த இயக்கம் 'ஹவுதிகள்' எனப் பெயர் பெற்றது.

ஹுசைனுக்குப் பின் அப்துல் மாலிக் அல்-ஹவுதி தலைவரானார். பழங்குடிகள் கட்டமைப்பையும் நவீன ஏவுகணைத் தொழில் நுட்பத்தையும் இணைத்த இந்த இயக்கம், வெறும் ஆயுதக் குழுவாக மட்டும் இல்லாமல், புறக்கணிக்கப்பட்ட மக்களின் அதிகார மையமாகவும் உருவெடுத்தது.

இதை ஒரு சாதாரண ஆயுதக் குழுவின் கதையாகப் பார்க்காமல், பிராந்தியப் புறக்கணிப்பு, மத அடையாளம் மற்றும் புவிசார் அரசியல் முரண்பாடுகளுக்கு இடையே அடையாளத்தை இழந்து, மீண்டும் அடையாளத்தைத் தேடி எழுச்சிபெற்ற ஓர் அதிகார மையத்தின் கதையாகப் பார்க்க வேண்டும்.

### ஈரானின் எதிர்ப்பு அச்சு

மேற்கத்திய எதிர்ப்பு, இஸ்ரேல் மற்றும் அமெரிக்க எதிர்ப்பு ஆகியவை ஹவுதிகளின் முதன்மையானச் சித்தாந்தம். மத்திய கிழக்கில் ஈரான் தலைமையிலான 'எதிர்ப்பு அச்சில்' (Axis of Resistance) ஹவுதிகள் இணைந்துள்ளனர். ராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஈரானின் நெருங்கிய கூட்டாளியாகச் செயல்பட்டாலும், தங்கள் தனித்துவமான ஜைதி இஸ்லாமிய வேர்களை இவர்கள் இழக்கவில்லை.

ஹவுதிகளுக்கு ஆதரவு அளிப்பது, போர்ப் பயிற்சி அளிப்பது, ஆயுதங்கள் சப்ளை செய்வது என அனைத்திலும் முதன்மையாக இருப்பது ஈரான் தான். ஹவுதிகள் பயன்படுத்தும் பல ஏவுகணைகள், டேங்க் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் தற்கொலை ட்ரோன்கள் ஈரானில் வடிவமைக்கப்பட்டவை என்று அமெரிக்கா, சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இதை ஈரான் தொடர்ந்து மறுத்து வருகிறது.

2015ம் ஆண்டில் 30,000 ஆக இருந்த ஹவுதி படையினரின் எண்ணிக்கை, 2024ம் ஆண்டில், ஐ.நா. அறிக்கையின் படி 3.50 லட்சமாக உயர்ந்துள்ளது. வடகொரியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளும் ஈரான் வழியாக இவர்களுக்கு உதவுவதாகக் கூறப்படுகிறது.



### அதிகாரத்தைக் கைப்பற்றிய விதம்

ஹவுதிகளுக்கும் ஏமன் அரசுக்கும் இடையிலான மோதல் திடீரென உருவானது இல்லை. அது மதம், பொருளாதாரம், அரசியல் மற்றும் புவிசார் அரசியல் ஆகிய நான்கு பின்னணிகளைக் கொண்டது.

1980—90-களில் அதிபர் அலி அப்துல்லா சலேயின் ஊழல் மலிந்த ஆட்சியில் ஜைதிகளுக்கு அரசுப் பணிகளிலும், இராணுவத்திலும் உரிய பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டது. அவர்கள் வாழும் சடா மாகாணமும் அரசால் புறக்கணிக்கப்பட்டது. ஜைதி தலைவர் ஹுசைன் ஹவுதியை இராணுவம் சுட்டுக் கொன்றது.

அதன்பின் 2004 முதல் 2010 வரை நடந்த 6 உள்நாட்டுப் போர்களிலும் ஹவுதிகளை ஏமன், சவுதி அரேபிய கூட்டுப் படைகளால் அழிக்க முடியவில்லை. 2011ம் ஆண்டு மக்கள் புரட்சியில் சலேவின் ஆட்சியை வீழ்த்திய ஹவுதிகள், பின்னணியில் நடந்த அரசியல் மாற்றங்களைப் பயன்படுத்தித் தலைநகர் சனாவைக் கைப்பற்றினர். இவர்களைத் தடுக்க 2015ல் சவுதி அரேபியா தலைமையிலான 9 நாடுகள் போரைத் தொடங்கின. இருப்பினும், 8 ஆண்டு தாக்குதல் நடத்தியும் ஹவுதிகளை அழிக்க முடியவில்லை. இன்று ஏமனின் 80 சதவீதம் மக்கள் வாழும் வடமேற்குப் பகுதிகள் மற்றும் முக்கியத் துறைமுகமான அல்-ஹுதைதாவைத் ஹவுதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

### செங்கடலில் ஆதிக்கம்

2023ம் ஆண்டு காசா போர் தொடங்கியதும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகச் செங்கடலில் செல்லும் மேற்கத்தியக் கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தத் தொடங்கினர். 2025ல் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த உத்தரவிட்டார். அமெரிக்கக் கப்பல்கள் மீதான தாக்குதலை மட்டுமே ஹவுதிகள் நிறுத்தினர். ஆனால், இஸ்ரேலை குறி வைப்பதை நிறுத்தவில்லை.

அமெரிக்கா மற்றும் நேட்டோ கூட்டமைப்பு நாடுகளாலும் செங்கடலில் ஹவுதிகளின் ஏவுகணைத் தாக்குதல்களை முழுமையாக தடுத்து நிறுத்த முடிவதில்லை. சில ஆயிரம் டாலர் மதிப்புள்ள ஹவுதிகளின் மலிவு விலை ட்ரோன்களை வீழ்த்த, அமெரிக்கா கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள 'பேட்ரியாட்' ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. இது அமெரிக்காவுக்கு பெரும் நிதிச்சுமையை உருவாக்கியுள்ளது.

### உலகப் பொருளாதாரத் தாக்கம்

உலகின் மொத்த கடல்வழி வர்த்தகத்தில் 15 சதவீதம் மற்றும் கன்டெய்னர் வர்த்தகத்தில் 30 சதவீதம் சூயஸ் கால்வாய் வழியாகவே நடை பெறுகிறது. ஹவுதிகளின் தாக்குதலால் கப்பல்கள் எகிப்து வழியாக செல்வதைத் தவிர்த்து ஆப்பிரிக்காவின் 'நம்பிக்கை முனை' வழியாகச் சுற்றிச் செல்கின்றன. இதனால், பயண நேரம் 10 முதல் 14 நாட்கள் அதிகரித்து, போக்குவரத்து செலவும் காப்பீட்டுக் கட்டணமும் உயர்ந்துள்ளது.

எகிப்து நாட்டின் அந்நியச் செலாவணி பாதிக்கப்பட்டு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. மூலப் பொருட்கள் தாமதமானதால் ஐரோப்பிய நாடுகளில் டெஸ்லா, வால்வோ போன்ற பெருநிறுவனங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டன. பொருட்களின் விலை உயர்ந்து உலகளவில் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

சூயஸ் கால்வாய் பயன்பாடு குறைந்ததால் எகிப்து நாட்டின் அன்னியச் செலாவணி 60 சதவீதம் வரை சரிவடைந்துள்ளது. கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வினியோகம் பாதிக்கப்பட்டுச் சர்வதேசச் சந்தையில் நிலையற்ற தன்மை நிலவுகிறது. ஒரு பிராந்திய ஆயுதக் குழு, எளிய ஆயுதங்களைக் கொண்டு உலக வர்த்தகத்தின் பெரும் பகுதியை முடக்கி, வல்லரசுகளின் பொருளாதாரத்தையே ஆட்டிப் படைக்க முடியும் என்பதை ஏமனின் ஹவுதிகள் நிரூபித்துள்ளனர்

# நியூயோர்க்கில் நிறுவப்பட்ட இலவச கழிப்பறை:- 10 நிமிடத்திற்கு மேல் உள்ளே இருந்தால் கதவு திறந்து விடும்

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் பொதுமக்களின் தேவைக்காக, நகரின் 5 முக்கிய பகுதிகளில் மொத்தம் 17 இலவச பொது கழிப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த கழிப்பறைகளை யார் வேண்டுமானாலும் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை இந்த கழிப்பறைகள் திறந்திருக்கும்.

இந்த கழிப்பறைகள் இருக்கும் இடத்தை கண்டறிய பிரத்யேக மொபைல் செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல வசதிகள் இருந்தாலும், இந்த கழிப்பறைகளை பயன்படுத்துவதற்கு ஒரு முக்கியமான (18ம் பக்கம் பார்க்க)



# நிழல் யுத்தக் களத்தின் வித்தகர்கள் “றோ” அமைப்பின் வெற்றிக் கதை!

அறத்தைக் காப்பவனை அறம் காக்கும் - இது தான் இந்தியாவின் தலை சிறந்த வெளிநாட்டு உளவு அமைப்பான ‘றோ’வின் (RAW) தாரக மந்திரம்.

வெற்றிகள் பெற்றால் கொண்டாட்டங்கள் இருக்காது, தோல்விகள் அடைந்தால் துக்கத்தையும் துயரத்தையும் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. அவர்களின் பெயரோ, முகமோ, முகவரியோ உலகுக்கு ஒருபோதும் தெரியப் போவதில்லை.

தேசத்தின் இறையாண்மையைக் காக்க எல்லை கடந்து நிற்கும் அதிகாரிகளின் உழைப்பில் தான் இந்தியாவின் அமைதி நிலை நாட்டப்படுகிறது. துப்பாக்கிகளின் சத்தமின்றி, வெடி மருந்துகளின் புகையின்றி எல்லைகளுக்கு அப்பால் நடக்கும் ஒரு ‘நிழல் உலகப் போரில்’ தேசத்தின் முதல் அரணாக நின்று போராடுபவர்கள் தான் ‘றோ’ அமைப்பின் உளவாளிகள்.

ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது அதன் இராணுவப் பலத்தில் மட்டும் இல்லை எதிரியின் அடுத்தகட்ட நகர்வை முன் கூட்டியே கணிக்கும் உளவுத் திறனில் தான் இருக்கிறது. இதற்காகத்தான் 1968ம் ஆண்டு 25 அதிகாரிகளுடன் ‘ரா’ ஒரு சிறிய அமைப்பாகத் தொடங்கப்பட்டது. ஆனால், இன்று 58 ஆண்டுகளைக் கடந்து, உலகின் மிகச் சக்திவாய்ந்த உளவு அமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

### றோ எப்போது ஏன் உருவானது?

1947ம் ஆண்டு இந்தியா விடுதலையடைந்த போது நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உளவுப் பணிகளை ‘இன்டலிஜென்ஸ் பியூரோ’ (IB) என்ற ஒரே அமைப்பே கவனித்து வந்தது. ஆனால், 1962இல் சீனப் போர் மற்றும் 1965இல் பாகிஸ்தான் போர் ஆகிய இரு முக்கிய நிகழ்வுகள் இந்தியாவின் பாதுகாப்பு அமைப்பில் மிகப் பெரிய கருந்துளை இருந்ததை வெளிச்சம்போட்டுக் காட்டின.

வெளிநாட்டு உளவுத் தகவல்களைச் சேகரிக்கப் பிரத்யேகமாக ஒரு சக்திவாய்ந்த அமைப்பு தேவை என்பதை உணர்ந்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, 1968 செப்டம்பர் 21 அன்று ‘றோ’ அமைப்பை உருவாக்கினார். இதன் முதல் தலைவராக ராமேஸ்வர் நாத் காவோ பொறுப்பேற்றார்.

‘றோ’ அமைப்பை உருவாக்கும் பணி காவோவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பே, உளவுத் துறையில் அவர் கணிசமான அனுபவத்தைப் பெற்றிருந்தார். 1968இல் அவருக்கு இருந்த சவால் வெளிநாட்டு உளவுத் துறைக்கான திறனை கிட்டத்தட்ட பூ ஜ்ஜியத்திலிருந்தே கட்டமைப்பதாகும். ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் ‘றோ’வின் தலைவராகப் பணியாற்றிய காவோ, அதன் ஆரம்பகால செயல்பாடுகளையும் நிறுவனக் கலாச்சாரத்தையும் உருவாக்கினார். இவரது காலத்தில் பயிற்சி பெற்ற அதிகாரிகள் ‘காவ் பாய்ஸ்’ (Kaoboys) என்று அழைக்கப்பட்டனர்.

### றோவின் முக்கிய பணிகள்

ஹாலிவுட் திரைப்படங்களில் காண்பிக்கப்படும் ஜேம்ஸ் பாண்ட் சாகசங்களை விட நிஜ வாழ்க்கையில் ‘றோ’வின் பணிகள் மிகவும் சிக்கலானவை மற்றும் நுண்ணறிவு மிக்கவை. அவை:

இந்தியாவின் எதிரி நாடுகளின் இராணுவ நகர்வுகள், அரசியல் மாற்றங்கள் மற்றும் உத்திசார் முடிவுகளை முன்கூட்டியே கணித்து மத்திய அரசுக்குத் தெரிவித்தல்.

இந்தியாவுக்கு எதிராக வெளிநாடுகளில் தீட்டப்படும் பயங்கரவாதச் சதித்திட்டங்களைக் கண்டறிந்து அழித்தல்.

அண்டை நாடுகளின் அணு ஆயுத நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் இந்தியாவின் தொழில்நுட்பப் பாதுகாப்பை உறுதி செய்தல்.




அதிநவீன தொழில்நுட்பங்கள் மூலம் அண்டை நாடுகளின் செயற்கைகோள் தொடர்புகள் மற்றும் இணைய வழிக் கசிவுகளைக் கண்காணித்தல்.

அண்டை நாடுகளின் அரசியல் நகர்வுகள், அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களை உன்னிப்பாகக் கண்காணித்து தகவல் அளித்தல்.

தேசியப் பாதுகாப்புக்குத் தொடர்புடைய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகளைக் கண்காணித்தல்.

### வங்கத்தேசப் போரும் றோவின் வெற்றியும்

1968இல் ‘றோ’ தொடங்கப்பட்டு மூன்றே ஆண்டுகளில், அதன் திறமைக்கு ஒரு மாபெரும் சோதனை வந்தது. 1971இல் கிழக்கு பாகிஸ்தானில் (தற்போதைய வங்கதேசம்) பாகிஸ்தான் ராணுவத்தின் கொடூரத் தாக்குதல்களுக்கு எதிராக மக்கள் போராடினர்.

ஆர். என். காவோ தலைமையிலான ‘றோ’, கிழக்குப் பாகிஸ்தானில் தொடர்புகளை ஏற்படுத்தி, உளவுத் தகவல்களைச் சேகரித்தது. வங்கதேச விடுதலைப் போராளிகளான ‘முக்தி பாகினி’க்கு பயிற்சி அளிப்பதிலும் ஆதரவளிப்பதிலும் முக்கியப் பங்கு வகித்தது.

1971 நவம்பரில் பாகிஸ்தானிய அமைப்பில் உள்ள ஓர் உள்நபரிடமிருந்து வான்வழித் தாக்குதல் குறித்த உளவுத் தகவலை காவோவின் குழு பெற்று டிசம்பர் 3 அன்று பாகிஸ்தான் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்பே இந்திய இராணுவம் ஆயத்தமாக வழி வகுத்தது.

பாகிஸ்தான் விமானங்களுக்கு இந்திய வான்வெளித் தடையும் விதிக்கப்பட்டது. இதன் விளைவாக 13 நாட்களில் பாகிஸ்தான் சரணடைந்தது. உலக வரைபடத்தில் ‘வங்கதேசம்’ உருவானது.

### முக்கிய சம்பவங்கள்

1980களில் பஞ்சாபில் தனிநாடு கோரிய காலிஸ்தான் இயக்கம் உச்சத்தில் இருந்த போது கனடா, பிரிட்டன், பாகிஸ்தானில் இருந்து அவர்களுக்குக் கிடைத்த நிதி மற்றும் ஆயுதச் சங்கிலியை ‘றோ’ துண்டித்தது. 1984 ‘ஆபரேஷன் புளூஸ்டார்’ நடவடிக்கையின் போதும் வெளிநாட்டு ஆதரவுகளைக் கண்காணித்து அரசுக்கு முக்கியத் தகவல்களை வழங்கியது. இந்தியாவின் பாதுகாப்புக்கு எப்போதும் சவாலாக இருக்கும் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ அமைப்புடன் ‘றோ’ நடத்தும் நிழல் உலகப் போர் குறிப்பிடத்தக்கது. 1970களில் பாகிஸ்தான் ரகசியமாக அணு ஆயுதத்தைத் தயாரிக்க முயன்ற போது, கஹுஜீட்டா (Kahuta) அணு உலை ஆய்வகத் தகவல்களை ‘றோ’ சேகரித்தது.

1999 கார்கில் போரின் போது பாகிஸ்தான் இராணுவத் தளபதி பர்வேஸ் முஷாரஃப் மற்றும் அவரது அதிகாரிகளுக்கு இடையே நடந்த தொலைபேசி உரையாடலை இடைமறித்துக் கைப்பற்றி, போரில் பாகிஸ்தான் அரசு நேரடியாக ஈடுபட்டதை உலகுக்கு நிரூபித்தது.

தொடக்க காலத்தில் மனித உளவு முறைகளை மட்டுமே நம்பியிருந்த ‘றோ’, இன்று செயற்கைக்கோள் படம் பிடித்தல், சைபர் கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. இதன் கீழ் இயங்கும் தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு (NTRO), நாட்டின் விண்வெளி மற்றும் இணையப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. எந்தப் புகழையும் விரும்பாமல், எல்லைக்கு அப்பால் கடந்து நின்று தேசத்தைக் காக்கும் ‘றோ’ அமைப்பின் பணி, வரலாற்றில் என்றும் போற்றத்தக்கது.
- நன்றி:- இந்து

# ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் விமானத்தில் பெண் பயணிக்கு சிகிச்சை அளித்த தமிழ்நாடு மருத்துவருக்கு பாராட்டு!

விமானத்தில் உடல்நலம் பாதித்த இலங்கைப் பெண்ணுக்கு சிகிச்சை அளித்து காப்பாற்றிய பெரியகுளம் மருத்துவர் மூர்த்திக்கு ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் நிறுவனம் அவரைப் பாராட்டிச்சான்றிதழ் வழங்கியது.

தேனி மாவட்டம் பெரிய குளம் தெற்கு அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர் மருத்துவர் மூர்த்தி (78). இவர் ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள சிட்னி நகரில் தனது மகனை பார்ப்பதற்காக கடந்த 19ம் தேதி ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்தார். கொலம்பியா விமான நிலையத்தில் இருந்து சிட்னி நோக்கிச் சென்ற அந்த விமானத்தில் இவருடன் பயணித்த இலங்கையைச் சேர்ந்த 74 வயது பெண் திடீரென மயங்கினார்.

உடனே மருத்துவர் மூர்த்தி அப்பெண்ணை பரிசோதனை செய்ததில் அவருக்குக் குறைந்த ரத்த அழுத்தப் பாதிப்பு இருந்தது தெரியவந்தது.






இதைத் தொடர்ந்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார். சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த மாத்திரை வழங்கினார். சுமார் ஒரு மணி நேரக் கண்காணிப்பில் அந்தப் பெண் இயல்பு நிலை திரும்பினார். மருத்துவரின் முதல் உதவி மற்றும் தொடர் சிகிச்சையால் சகபயணி காப்பாற்றப்பட்டதுக்கு விமானத்தில் பயணித்தோர் பலரும் பாராட்டுத் தெரிவித்தனர். மேலும், ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் நிறுவனம் மருத்துவர் மூர்த்திக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கவுரவித்தது.




# ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் நீதியின் அடுத்த அத்தியாயம்!

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு அன்று 270க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கவும், 500க்கும் மேற்பட்டோர் காயமடையவும் காரணமான குண்டு வெடிப்புத் தாக்குதல்களைத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட 15 பேருக்கு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றம் 220 வருட நீண்ட கால சிறைத்தண்டனைகளை விதித்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல்களுக்கு மூளையாகச் செயல்பட்டதாக அரசுத் தரப்பு கூறிய நௌஃபர் மௌலவியும் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களில் அடங்குவார். அதேநேரம், வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஏனைய ஒன்பது பேர் விடுவிக்கப்பட்டனர்.



மூன்று தேவாலயங்கள் மற்றும் மூன்று சொகுசு ஹோட்டல்களில் ஒருங்கிணைந்து நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகள், 2009ல் இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து நிகழ்ந்த மிக மோசமான உயிரிழப்புகளை ஏற்படுத்திய தாக்குதல்களாகும். உயிரிழந்தவர்களில் 45 வெளிநாட்டினரும் அடங்குவர். உயிரிழந்த வெளிநாட்டினரில் 11 இந்தியர்கள், எட்டு பிரித்தானியர்கள் மற்றும் ஐந்து அமெரிக்கர்கள் அடங்குவர்.

உயிரிழந்தவர்களில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், சீனா, டென்மார்க், ஜப்பான், நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். தாக்குதல்களை நடத்திய குண்டுதாரிகள் அனைவரும் அந்த வெடிப்புகளில் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளே காரணம் என்று புலனாய்வாளர்கள் முன்னரே குற்றம் சாட்டியிருந்தனர் குற்றம் சாட்டப்பட்ட 25 பேரும் இலங்கையின் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களில் ஒருவர் காவலில் இருந்தபோது உயிரிழந்தார்.

செவ்வாய்க்கிழமையன்று, குற்றம் சாட்டப்பட்ட 15 பேருக்கும் தலா 200 முதல் 260 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், அவர்களின் அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துகளையும் பறிமுதல் செய்யவும் கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றத்தின் நீதியரசர்களான நவரத்னம் மாரசிங்க, இராமநாதன் கண்ணன் மற்றும் சுஜீவ நிசங்க ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

23,000க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட அவர்கள், ஜோடி ஜோடியாக விலங்கிடப்பட்டு, இரண்டு சிறைச்சாலை பேருந்துகளில் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தாக்குதல்களைத் தொடர்ந்து, முக்கியமான உளவுத்துறைத் தவறு ஒன்று நிகழ்ந்ததாக இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். தாக்குதல்கள் குறித்த இந்தியாவிலிருந்து வந்த தகவல் அதிகாரிகளுடன் முறையாகப் பகிர்ந்துகொள்ளப்படவில்லை என்று முன்னதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டில் குண்டுவெடிப்புத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த தேசியப் பாதுகாப்புத் தோல்விகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பானவர் என்று கண்டறிந்த நீதிமன்றம், பாதிக்கப்பட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான தொகையை இழப்பீடாக வழங்குமாறு அவருக்கு உத்தரவிட்டது.

குண்டுவெடிப்புகளுக்குக் காரணமான குற்றவியல் ரீதியான கவனக்குறைவுக்காக, கடந்த மாதம் இரண்டு முன்னாள் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இலங்கையில் மரண தண்டனையை நிறைவேற்றுவது பல தசாப்தங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இத்தகைய தண்டனைகள் வழக்கமாக ஆயுள் சிறைத்தண்டனையாகக் குறைக்கப்படுகின்றன. ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, இலங்கையர்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

முன்னாள் உளவுத்துறைத் தலைவர் சுரேஷ் சல்லே மீதான தனிப்பட்ட விசாரணை நடைபெற்று வரும் சூழலில் இந்தத் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் இணைந்து குண்டுவெடிப்புத் தாக்குதல்களைத் திட்டமிட்டதாக சல்லே மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வாக்கை அதிகரிப்பதற்காகவே இந்தத் தாக்குதல்கள் நடக்க அனுமதிக்கப்பட்டன என்று தகவல் அம்பலப்படுத்துபவர் அளித்த சாட்சியத்தைக் கேட்ட பிரிட்டிஷ் ஒளிபரப்பு நிறுவனமான சேனல் 4-இன் 2023 ஆம் ஆண்டு ஆவணப்படத்தில் ஒளிபரப்பப்பட்ட குற்றச்சாட்டுகளையே இந்தக் குற்றச்சாட்டுகளும் எதிரொலிக்கின்றன.

பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட சல்லே, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஒடுக்குவதை மையமாகக் கொண்ட பிரச்சாரத்தின் மூலம் 2019 தாக்குதல்களுக்குப் பின்னர் சில மாதங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ள கோட்டபாய ராஜபக்ஷ, நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்பாகத் தான் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்திற்கான அரசியல் ஆதரவை வலுப்படுத்தும் வகையிலான ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலை உருவாக்குவதற்காகவே இந்த தாக்குதல் வலைப்பின்னல் கட்டமைக்கப்பட்டதாகப் புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தாக்குதல் நடந்து சில மாதங்களுக்குப் பின்னர் கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் அக்குடும்பம் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின்படி குழப்பத்தை உருவாக்குவதும், 2009இல் தமிழ்ப் பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கியதற்காகத் தனது ஆதரவாளர்களால் பாராட்டப்படும் முன்னாள் பாதுகாப்புத் துறைத் தலைவரான கோட்டபாய ராஜபக்ஷவை, பாதுகாப்பை மீட்டெடுப்பதற்கு மிகவும் பொருத்தமான தலைவராக முன்னிறுத்துவதுமே இதன் நோக்கம் என்று புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கு முன்னதாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தாக்குதல்கள் தொடர்பான விசாரணைக்காக ரிஷாட் பதியுதீன் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.